தமிழர் தகவல்
இலண்டன்
Tamils' Information


ஆகஸ்ட் 2005



மாதசோதிடம்
உள்ளே

07.07.2005 அன்று
இலண்டனில் நடந்த
குண்டு வெடிப்பு
சம்பவத்திற்காக கண்ணீர்
விடுகிறோம்

மாதாந்திர செய்திச் சஞ்சிகை
A monthly information digest


இலண்டனில்
தரமான
தங்கத்திற்கு
Lakshmis Jewellers
276 High Street North
London
E12 6SA U.K
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448

# தமிழர் தகவல் Tamils' Information

ஆகஸ்ட் 2005 மலர் : 03 இதழ் : 26

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## சத்துராதியின் வீட்டைப் பிச்சை எடுத்தே கெடுப்பது

இலங்கையின் சட்டசபைக் காலத்திலிருந்தே சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களை தாலாட்டித் தாலாட்டி எப்படி இளிச்சவாயர்கள் ஆக்கினார்கள் என்பதற்கு ஒரு நீண்ட பட்டியல் உண்டு. சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், அருணாசலம் மகாதேவா, ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம் என்று இப்பட்டியல் நீள்கின்றது. ஆரம்பத்தில் எடுப்போம் – கவிழ்ப்போம் எனக் கூக்குரலிட்ட – கொள்கை முழக்கம் செய்த தலைவர்கள் காலப்போக்கில் தங்கள் காலடிக்கே வருவார்கள் என்பதும், வந்தார்கள் என்பதும் சிங்கள சமூகம் நன்றாகவே கணக்குப் பண்ணிக்கொண்டிருக்கிறது. எதையும் அமைதியாக இழுத்தடிப்பதால் ஏமாற்றிவிடலாம் தமிழனை என்பது ஆட்சிக்கு வந்த அனைத்துச் சிங்களத் தலைவர்கட்கும் அத்துபடி.

ஐம்பதுக்கு, ஐம்பது கேட்டவர்கள் ஒரு அமைச்சுப் பதவிக்குள் அடங்கிப்போனதும், பண்டா–செல்வா ஒப்பந்தமே தமிழர்களுக்குப் போதாது என்று மேடையில் முழங்கியோர் எதிர்க்கட்சித் தலைமைப்பதவியுடன் இறங்கிப்போனதும் வரலாற்றில் சிங்கள அரசுகளின் சாதனைகளே என்பதை மறுப்பதற்கில்லை. தேசிய அரசு ஏற்படுத்திய செல்வநாயகம் – சேனநாயக்க கூட்டு ஏற்படுத்திய மாவட்ட சபை என்ற கூழ்முட்டை, எதுவுமற்ற ஒரு ஆடம்பர அரியாசனமாக அழிந்துபோனதை மக்கள் கண்டிருக்கிறார்கள். தேசிய அரசை தமிழ்த்தலைவர்கள் வாயாலேயே ' எங்கள் அரசு ' என்று கூற வைத்த பெருமையும், அவர்களின் ஒத்துழைப்புடனேயே தமிழ் அரச ஊழியர்களைச் (சிங்களம்) ஆட்சிமொழி படிக்காத காரணத்தினால் வெளியேற்றிய பெருமையும் சிங்களத் தலைவர்களின் அரும்பெரும் சாதனைதான் என்பதை மறுப்பதற்கில்லை. அந்தத் தேசிய அரசுக்குள் அகப்பட்டுக் கொண்ட இரு தமிழ்த்தலைவர்கள், ஒருவர் இந்துப் பல்கலைக்கழகம் கேட்டதும், மற்றவர் தமிழ்ப் பல்கலைக்கழகம் கேட்டதும், இறுதியாக எதையும் செய்யாமலேயே இழுத்தடிப்புச் செய்த சிங்கள அரசு இவர்களை ஏமாளியாக்கியதும், அதன்பின் மற்றைய அரசு தானாகவே ஒரு வளாகத்தை அமைத்து அந்த நற்பெயரை தனதாக்கிக் கொண்டதும் தமிழ்மக்கள் அறியாததல்ல, காலம் காலமாகக் காவடி தூக்கிக் கண்டதுதான் என்ன? – கடவுள்தாள் தமிழனைக் காப்பாற்ற வேண்டும் என்பதா!

தமிழர்களுக்கு வாரி வழங்குகிறோமென்று மாய்ஜாலம் காட்டிவிட்டு உள்ளதையும் பிடுங்கிக்கொண்ட செயல்களை பல தடவைகள் சிங்கள அரசுகள் திறம்பட செய்துகாட்டி வந்துள்ளன. அதில் ஒன்றுதான் தமிழுக்கு உத்தியோக மொழி அந்தஸ்தும் அதற்கான அமுல்படுத்தும் அமைச்சும். நடைமுறையில் இன்றும் தனிச் சிங்களம்தான் கோலோச்சுகின்றது. நம்மவர்கள் இப்போதும் மொழிபெயர்ப்புக் கேட்டுத்தானே முழிபிதுங்கி நிற்கிறார்கள்.

ஆடிக்கலவரத்தின்பின் அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன். அது சிபாரிசு செய்த நிவாரணங்கள் என்னவாயிற்று? அடிக்கடி நடைபெற்றுவரும் கொலைகள் பற்றிய விசாரணைகள் என்னவாகின்றது. எல்லாமே ' பிந்துநுவேவ ' நடைமுறைதான் ' நீதி 'யாகிப் போனது. நிலைபெற்றும் வருகிறது.

திம்புவிலிருந்து தாய்லாந்துவரை நடந்தது சமகாலத்தில்தானே, நாம் மறந்துவிட்டோமா? மரம் நட்டதும், மண்போட்டதும், நீர்விட்டதும்தான் நினைவில் நிற்கிறது. அதன்பின் உருவாக்கப்பட்ட எந்த அமைப்பும் செயற்பட்டதா? எல்லாமே செல்லாக்காசானதுதான் கண்கூடு. இப்போ பணம் தேவையானபோது அதற்கும் தமிழனைக் காரணங்காட்டி உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பின் கதி என்னவானது? உலக அரங்கில், உதவுவதுபோல் காட்டிடும் சிங்கள அரசு எடுத்தெறிவதை, ஏந்துவதுதான் தமிழன் தலை விதியா. அட்டகாசமாக ஒப்பமிட்டு, ஆக்குவதுபோல ஆக்கி அதிசயிக்க வைத்தபின் மிகச் சாதுரியமாக நீதிமன்றத்தின் காலடியில் தடைப்படுத்தப்பட்டுள்ள இதன் நிலை என்னவாகும்? எல்லாமே இலகுவாக – அமைதியாகத் தமிழன் வாழ்வு அழிக்கப்படுகிறது.

' கள 'த்தில் வெற்றிகொள்ள முடியாத தமிழனை அணைத்துக்கொடுக்கும் அற்புதமான முயற்சிகள்தான் அரங்கேறுகின்றன. சத்துராதியின் வீட்டைப் பிச்சையெடுத்தே கெடுக்கலாம் என்பதில் சிங்களத் தலைவர்கள் சாமார்த்தியமானவர்கள். இதை எழுதிக்கொண்டிருக்கும்போது தமிழ் மக்கள் தமது தேசியத்தலைவரை விளித்துப், பொறுத்தது போதும் போராட அனுமதியுங்கள் என்று பகிரங்க அழைப்பு விடுத்திருக்கும் செய்தி வந்துள்ளது. முடிவு.....?

– ஆசிரியர்

**முகவரி :**
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

**தொலைபேசி :**
020 8480 3320

**Email :**
tamilarthakaval@yahoo.co.uk

**வெளியீடு :**
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

**ஆசிரியர் :**
அரவிந்தன்
Editor :
Aravindan

**வங்கி :**
H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No. : 81437100

**கணினி, அச்சுப்பதிப்பு :**
தமிழர் தகவல்
Computering & Printing :
Thamizhar Thagaval

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !



# Ambaal Jewellers

176 Upper Tooting Road London SW17 7ER
Tel : 020 8672 9955 Fax : 020 8672 7097

784 London Road Thornton Heath Surrey CR4 6JB
Tel : 8689 8293 Fax : 020 8684 0323

# Pathmini Jewellers

**22 Carat Gold, Jewellery**
**Precious Stones, Diamond Merchants**

892 London Road Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111 Fax : 020 8664 8999





வெம்பிளியில் தரமான தங்கத்திற்கு

# Tharani Jewellery

54 Ealing Road Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777



# SIVAYOGAM சிவயோகம்

(A Charity Registered in England & Wales- Reg. No: 1050398)

# இந்து கலாச்சார நிலையம்

# Hindu Cultural Centre

3C, Ranelagh Road, Wembley, Middx, HA0 4TW
Tel: 07956 100 646 Fax: 020 8767 2337
*E.mail: info@sivayogam.plus.com Web:www.sivayogam.com*



அன்பர்களே,

வெம்பிளி பகுதியில் ஒரு ஆசிய கலாச்சார நிலையம் அமைத்துச் செயற்பட வேண்டும் என்ற எண்ணம் கைகூடியுள்ளது. நிலம் ஒன்று £900,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. சிவயோகத்தின் உன்னத நிலை, அறக்கட்டளையாக இருப்பதும் அதன் கடந்த ஒன்பதுவருடகால சாதனைகளும், இந்த கொள்வனவைச் செய்வதற்கு வாய்ப்பாக இருந்தன. "சிவயோகம்" என்ற அறக்கட்டளையில் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயில் ஒரு அங்கமாகவும், மேற்படி நிலையம் இன்னொரு அங்கமாவும் நடைமுறையில் இருக்கும். இந்த அமைப்பிற்குட்பட்டு திருக்கோயிலும், நிலையமும் ஒவ்வொரு தனித்தனித் திருப்பணிச் சபையின் கீழ் இயங்கும்.

திருப்பணிச்சபை நமது முயற்சிக்குக் கைகொடுக்கும் அன்பர்களைக் கொண்டிருக்கும். இம் முயற்சிக்குச் சைவர்கள் அனைவரின் ஒத்துழைப்பும், உதவிகளும் அவசியமாகின்றன. அறக்கட்டளையின் கீழ் இயங்கும் நிலையம் இந்த நாட்டின் சட்டப்படி ஒரு பொதுச் சொத்தாகவே இயங்கிவரும். சிவயோகத்தின் யாப்பிற்கிணங்க நிலையத்தின் தேறிய வருவாய் அனைத்துமே நமது தாய் நாட்டிற்கு, தற்பொழுது அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயிலில் நடைமுறையில் உள்ளது போல, மாதாமாதம் அனுப்பி வைக்கப்படும். கணக்கு வழக்குகள், செயற்பாடுகள் ஆகியன ஒளிவு மறைவுயின்றி நடைமுறைப்படுத்தப்படும். அடியார்களின் பிரதிநிதிகளே முன்னின்று செயற்பட ஊக்கம் அளிப்போம் என்று சிவயோகத்தின் சார்பில் நாம் உறுதி கூறுகின்றோம்.

கட்டிடநிதிக்கு உதவியாக ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப தொகையாகவோ, மாதாமாதம் வங்கிக் கட்டளைகள் ஊடாகவோ தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வெம்பிளி High Road ல் உள்ள NatWest (Sort Code -60 23 08) வங்கியில் இதற்கென தனியாக வங்கிக் கணக்கொன்று திறக்கப்பட்டுள்ளது(இலக்கம் – 73064246). நீங்கள் கொடுக்கும் தொகைக்கு பற்றுசீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் வரி (Personal Tax) செலுத்துபவராக இருந்தால் அதற்கென உள்ள படிவத்தில் நீங்கள் கையொப்பமிட்டு கொடுத்தால் உங்கள் நன்கொடையின் 28% நீங்கள் அரசாங்கத்திற்கு கொடுத்த வரியில் இருந்து சிவயோகம் அறக்கட்டளை பெற்று கொள்ளலாம். எனவே வரி செலுத்துபவர்கள் அந்த படிவத்தினைப் பூர்த்தி செய்து உதவவும்.

உங்கள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இம்முயற்சிக்கு பங்காளர்களாக்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். நன்றி.

அன்புடன்,

நாகேந்திரம் சீவரத்தினம்
(தலைவர், சிவயோகம் அறங்காவலர் சபை)

**24.07.2005**

உடனடித்தொடர்புகளுக்கு:

SIVAYOGAM
180-186, Upper Tooting Road,
London SW17 7EJ
Tel: 020 767 9881

அறம்செய்யவிரும்பு, அன்பே சிவம்

*Patron: Dr.K.Nadesalingam M.B.B.S.(Cey.),P.M.(Lond.),M.R.C.Psych.(U.K.)*
*Trustees: N.Seevaratnam, K.Singam, N.Karunanithy, S.Kumaresan, S.Nimalan*

## யுத்தம் தீர்வாகுமா ?

" யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் சமீபத்தில் விஜயம் மேற்கொண்டேன். இரண்டு பகுதிகளிலும் அரசாங்கம் குறித்துப் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. அரசாங்கம் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் என்றே அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஜனாதிபதியின் நோக்கம் குறித்து பெரும்பாலான மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இதைவிட முக்கியமான விடயம் உள்ளது. கடந்த இரண்டு மூன்று வருடங்களாக சகலதும் தடைபட்டு விட்டதாக அவர்கள் கருதுகின்றனர். அவர்கள் விரக்தி நிலையில் காணப்படுகின்றனர். குறுகியகால யுத்தமொன்று அவசியமென அவர்கள் கருதுகின்றனர். குறுகிய கால யுத்தம் தென்னிலங்கை மக்களுக்கு மீண்டும் யுத்தத்தின் தாக்கத்தினை நினைவுபடுத்துமென அவர்கள் கருதுகின்றனர். சிங்கள மக்கள் யுத்தத்தின் கொடுமையை மறந்துவிட்டதாக அவர்கள் கருதுகின்றனர். எனினும் குறுகியகால யுத்தமென்பது அபாயகரமானது. அமெரிக்கா ஈராக்கில் இதையே செய்தது. தமிழ்மக்கள் இவ்வாறு சிந்திக்கக்கூடாது. விடுதலைப்புலிகள் பொதுமக்களை விட அர்த்தபூர்வமாக, நிதானமாக இருக்கிறார்கள் ! "

*( அரசியல் ஆய்வாளர் ஜெகான்பெரேரா )*

## அறிவிலி ஆசிரியரானால்

" சுனாமி நிவாரணசபை உடன்படிக்கை காரணமாக எழுந்துள்ள புதிய நெருக்கடி, திருகோணமலைத் துறைமுகத்தின் புதிய உரிமையாளர் யார் என்பதே. பிரபாகரன் தனது ஈழநாட்டின் தலைநகரமாக திருகோணமலையைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எப்போதும் யோசனை செய்துவந்தார். விமான ஓடுபாதை ஒன்றினை எந்த இடத்திலும் அமைத்துக்கொள்ளலாம். ஆனால் துறைமுகம் ஒன்றினை அவ்வாறு அமைத்துக்கொள்ள முடியாது. புலிகள் இயக்கத்தால் நிர்வகிக்கப்படும் கிளிநொச்சி மாவட்டத்தில்தான் திருகோணமலைத் துறைமுகம் அமைந்துள்ளது. இந்த மாவட்டம் சுனாமி நிர்வாகசபையின் அதிகார அமைப்பின் கீழ் இருக்கிறது. அதற்கிணங்க இதுகாலம்வரை இலங்கை இராணுவத்தின் கீழ் பாதுகாப்பாக இருந்த திருகோணமலைத் துறைமுகம் இதன்பின் சுனாமி நிவாரண சபையினது அதிகாரத்தின் கீழ் வரும். பெருமுயற்சியின்றியே அது புலிகளுக்குச் சொந்தமாகிறது என்பதுதான் அதனுடைய பொருளா ? "

*(சிங்கள ' திவயின ' ஆசிரியத் தலையங்கம் 28.05.2005)*

## அதிகார ஆசை

" சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பதவிக்காலத்தை எவ்வளவுக்கு நீடிக்க முடியுமோ அவ்வளவுக்கு நீடித்து தனது அரசியல் எதிர்காலத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சியைத் தொடர்கிறார். ஆனால் நவம்பர் மாதத்துக்குப் பின்னரும் அவரது பதவியை நீடிப்பதாயின் தனது நிறைவேற்று அதிகாரத்தை வலுவாகப் பயன்படுத்தவேண்டிய நிலை அவருக்கு ஏற்படும். அதனை அவர் பயன்படுத்தவும் கூடும். ஏனெனில் பொதுக்கட்டமைப்பை அவர் எவ்வாறுதான் பிரசாரப்படுத்தியபோதும், அதுமட்டும் அவருக்கு வாக்கு வங்கியைப் பலப்படுத்த உதவப் போவதில்லை. கடந்த 14 மாதங்களாக அவரது ஆட்சி எதுவுமே செய்துவிடவில்லை. எனவே கிடைக்கும் நிதியைப் பயன்படுத்தி அல்லது உலக நாடுகள் தள்ளுபடி செய்யும் கடன் தொகை மூலம் மீதமாகும் நிதியை கவர்ச்சிகரமான திட்டங்கள் எவற்றையாவது நடைமுறைப்படுத்த இவ்வளவு காலமும் ஜே.வி.பி தான் இதற்குத் தடையாக இருந்தது என்று காட்டவேண்டிய தேவை அவருக்கு உள்ளது. "

*( வேலவன் - ஈழநாதம் )*

## கழுகுக்கு ஒரு கசப்பான அதிர்ச்சி

" அண்மையில் நடந்த ஈரான் ஜனாதிபதித் தேர்தலில் அகமெட் நெசாட் தெரிவு செய்யப்பட்டமை அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. 1979ல் ஈரானில் அமெரிக்கத் தூதுவராலயம் முற்றுகையிடப்பட்ட சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரி தற்போதைய ஜனாதிபதியா என்பதைக் கண்டறியும் முயற்சியில் புஷ் நிர்வாகம் ஆர்வம் கொண்டுள்ளது. இந்தத் தூதரக விவகாரமே ஜிம்மிகார்ட்டரின் அரசியல் வாழ்க்கையை முடித்து வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா இப்போது தனது தளங்களை முஸ்லிம் நாடுகளில் ஏற்படுத்த முனைகிறது. ஆப்கான் ஏற்கனவே அதற்கு இணங்கிவிட்டது. ஈராக்கில் கிளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டால் இது சாத்தியமாகுமென அமெரிக்கா கருதுகிறது. இப்போது ஈரான் ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி தெரிவு இந்தத் தந்திரோபாயத்தை முன்னெடுப்பதற்கான தடையாக உள்ளது. ஈராக்கில் அது சிந்திவரும் இரத்தம், ஈரான் மீதான தலையீடுகளை இப்போது சக்தியற்றதாக்கியுள்ளது. இதன் காரணமாக தற்போதைக்கு அமெரிக்கா ஈரானை மறைமுகமாகவும் நேரடியாகவும் அச்சுறுத்தும் தந்திரோபாயத்தையும் பின்பற்ற வேண்டியுள்ளது. அதன் வெளிப்பாடே ஈரான் ஜனாதிபதியின் கடந்தகாலங்களைக் கிளறும் முயற்சி என்பது முக்கியமானது. "

*( அ. ரஜீவன் - தினக்குரல் )*

## இலண்டன் அதிர்வு

" லண்டன் குண்டுத்தாக்குதல்கள் ஒஸாமா பின்லேடனின் நேரடி உத்தரவின் பிரகாரம் நடத்தப்பட்டவையா ? தம்மை இன்னொரு அல்-கொய்தாவாக சித்தரித்துக் கொள்ள முனையும் வேறு இஸ்லாமிய அமைப்பால் நடத்தப்பட்டவையா ? ஈராக்கிய கிளர்ச்சியின் காரணகர்த்தாவாகக் கருதப்படும் அபுமுஸாா் அல்-சர்க்காவியின் ஐரோப்பிய வலைப்பின்னல்களால் நடத்தப்பட்டவையா ? எதையும் திடமாகத் தெரிவிக்க முடியவில்லை. முதலாவது காரணம் சாத்தியப்படுமானால், அமெரிக்கா தலைமையில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் பிரதான இலக்காக இருந்தபோதிலும் அல்-கொய்தா வலைப்பின்னல் உறுதியாகவே இருக்கிறது எனக்கூறமுடியும். இது பயங்கரவாதத்தை ஒழிப்பதாக மீண்டும் சூளுரைத்துள்ள மேற்குலகத் தலைவர்களுக்கு பெரும் தலையிடியாகவே இருக்கும். எனினும் ஒஸாமா பின்லேடனின் முக்கிய தளபதிகளாகக் கருதப்படும் காலித் - பெஷால், அபுபராஜ் அல்-லிப்பி ஆகியோர் பிடிபட்டுள்ள நிலையில், பல முக்கியத்தர்கள் சிறைகளில் வாடும் பின்னணியில் அல்கொய்தா நேரடித் தாக்குதல்களை நடத்தக்கூடிய வாய்ப்புகள் குறைவானவையாகவே காணப்படுகின்றன. அல்கொய்தாவின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு, மழைக்காலக் காளான்களாய் கிளம்பியிருக்கும் வேறு இஸ்லாமியக் கடும்போக்கு அமைப்புக்கள் தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கிறதென்று பாதுகாப்பு சார்ந்த நிபுணர்கள் கூறுகிறார்கள். "

*(சதீஷ்- கிருஷ்ணப்பிள்ளை வீரகேசரி)*

## நயமான நாடகம்

" தற்போது இலங்கை இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரில், இலங்கை விவகாரங்களில் இந்தியா தன்னை உள்நுழைய விடுவதற்கான சந்தர்ப்பமாகவே உள்ளது. இதுவரை ஜே.வி.பி உட்பட்ட இனவாதக்கட்சிகள் இந்திய விரோதப்போக்கினைக் கடைபிடித்து வந்தார்கள். ஆனால் இன்று இவர்களே இந்தியாவின் பிரதான ஆதரவாளர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் ஜே.வி.பி எடுத்துள்ள நிலைப்பாட்டின் பின்னணியில் இந்தியாவும் உள்ளது. அதே நேரம் உத்தியோக பூர்வ இராஜதந்திர மட்டங்களில் இதற்கு ஆதரவான (பொதுக்கட்டமைப்புக்கு) கருத்துக்களை வெளிப்படுத்தியும் வரும். இது எல்லாம் இந்தியாவின் அணுகுமுறையில் ஒன்று. இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு இலங்கையில் பரவலாக எதிர்ப்புகள் இல்லை. இதுவே இந்தியாவுக்குச் சாதகமானது. ஆனால் சர்வதேச சமூகங்களின்படி எங்கும் வியாபித்து இருக்கும் தருணத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் பல்வேறு சந்தேகங்கள் உருவாகக்கூடும் என்பதால்தான் சற்றுத் தயக்கம் காட்டுகிறது. அதாவது உரிய சந்தர்ப்பத்தை தேர்ந்தெடுக்கவுள்ளது. எவ்வாறாயினும் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இலங்கையின் விவகாரங்களில் இந்தியாவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பங்களை நோக்கி இந்தியா காத்துக் கொண்டிருக்கிறது. "

*(துரைமடன் - தினக்குரல்)*

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

## Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables





மணங்கவரும் மளிகைச்சாமான்கள், மென்பானங்கள்,
மதுபான வகைகள், பழங்கள், மரக்கறி வகைகள், மீன்,
இறைச்சி என எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற எம்மை நாடுங்கள்

118, Tooting High Street London SW 17 0RR
Tel : 020 8682 3777

வோல்த்தம்ஸ்ரோவில்

## Kumarans

குமரன்ஸ்

TEXTILES



136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

*New Mot Station Open !*

# CAPITAL AUTOS LTD.

CA

51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com

இவர்களின்
விளம்பரத்தை
ttn
IBC
வானொலி
தொலைக்காட்சியில்
கேளுங்கள்

- Fully equipped M.O.T. & accident repair centre
- Insurance repairs welcome
- Recovery Service
- Approved insurance repairs
- Courtesy vehicle available For most repairs
- Professional friendly service and advice
- Collection & deliver within the local area

BMW MERCEDES
VAUXHALL
HONDA
VOLKSWAGEN
NISSAN Ford

Accident
Repair Centre
&
General Services
&
Repairs to all
Makes and Models



இலண்டனில் எந்த இடத்தில்
இருந்தாலும் உங்கள் வாகனத்
திருத்த வேலைகளுக்கு நீங்கள்
செல்ல வேண்டிய இடம்

£ 10 OFF
Your M.O.T !

Hurry - Limited Offer!

Reg : ________
Model : ________
Name : ________
Tel : ________

BASED ON CURRENT M.O.T FEE OF £42.10 • OUR VOUCHER PER CAR ONLY

## பிரியாவரம் !

அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்க் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதம் எங்கணும்
நான் சென்றே
எந்தை நினது அருள்புகழை
இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலை மேல்
சுத்த சிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருள்சோதி
செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ
பொறுத்தல் வேண்டும்
தலைவ ! நினைப்பிரியாத
நிலைமையும் வேண்டுவனே!

*– வள்ளலார் சுவாமிகள்*

## அனுத்திமிர் அடக்கு !

வியக்காதே
எவரையும்

இல்லை
வியப்பு
எதுவும்

வணங்காதே

மதி
மதி
மதி !

*– கவிஞர் அறிவுமதி*

## மெய்ம்மை உணர்வு !

மந்திரப் பேய் புத்தகப்பேய்
வாசனைப்பேய் பூசனைப்பேய்
தந்திரப்பேய் பாவகப்பேய்
தர்க்கப்பேய் – சிந்தையினின்று
ஆர்த்த விரதப்பேய்
அனைத்துமொரு வார்த்தையிலே
தீர்த்தவனே மெய்த்தேசிகன் !

*– சம்பந்த முனிவர்*

## தெளிவு !

வேறுபடு சமயமெலாம்
புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே
நின்
விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை

*– தாயுமானவர்*

## பேயன் ?

அருவண்ணத் தமிழ் மண்ணில்
ஆரியனை முன்போர்நாள்
வருக, என அழைத்திங்கே
வாழ்வித்த முதுதமிழன்
சுருள் குடுமி ஆரியனின்
சூழ்ச்சிக்கே பலியானான்
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர் தமிழன்

*– கவிஞர் காசி ஆனந்தன்*

## சுபதினம் !

ஆண்டுக்கு ஆண்டு
தேதிக்குத் தேதி
ஆயிரம் வருவது
சுபதினம்
அடுத்தவர் நலனை
நினைப்பவர் தமக்கு
ஆயுள் முழுவதும்
சுபதினம் !

*– கவியரசு கண்ணதாசன்*

## உயிர்ப்பு !

" தாயின் வயிற்றிலிருந்து
குழந்தை பிறந்ததும்
அது வீரிட்டு அழும் –
அழ வேண்டும்
அழாவிட்டால்...
தாய் அழுவாள் ! "

*– வாரியார் சுவாமிகள்*



மாதமிரு திருக்குறள் கற்போம்

## பெருமை !

" பெருமை பெருமிதமின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல் " (குறள் – 979)

பெருமை எனப்படுவது பெருமைப்படுவதற்கு ஏதுவான சிறப்புகள் தம்மிடம் இருந்தபோதும் தருக்கின்றி இருத்தலாகும். சிறுமை எனப்படுவது பெருமைப்பட ஒன்றுமில்லாத விடத்தும் பெருமிதத்தைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு செருக்குறுதலாகும்.

" அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும் " (குறள் – 980)

பெருமைப் பண்பு பிறருடைய குற்றம் குறைகளைக் கூறாது மறைத்து நிறைவுகளையே வெளிப்படக்கூறும். ஏனைய சிறுமைப்பண்போ பிறர் குணத்தை மறைத்துக் குற்றங்களையே தூற்றிப்போகும்.

# ஆழ்ந்த துயரங்கள்

07.07.2005 இலண்டனில் நடந்த குண்டுத் தாக்குதலால் மரணித்த - பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் நாம் துயருறுகின்றோம்.

மனித உயிர்கள் மலினப் படுத்தப்படுவதும், அப்பாவிகள் அழிக்கப் படுவதும் ஆன இந்த அறிவிலித்தனம் எந்தச் சமூகத்துக்கும் எதிர்காலத்தைச் சீராக்கப் போவதில்லை. விடுதலையைப் பெற்றுத் தரப்போவதில்லை. மேலும் மேலும் விபரீதங்களையும் வெறுப்புகளையுமே வளர்க்கும். அமைதியான நாடு அமைதி இழப்பதும், அநியாயமான கெடுபிடிக்குள் ஆளாவதும் துர் அதிர்ஷ்டமே. இப்போது உள்ள சுமுகமான வாழ்வுகள் தொல்லைகளாக மாறாமல் இருக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம்.

— ஆசிரியர்.



இலகுவழி சுயதெரிவு முறையில் மனம் விரும்பும் மணமகனையோ, மணமகளையோ தெரிவு செய்யலாம்!... கிழமை நாட்களில் மாலை வேளையில் தொடர்பு கொள்க.

பொருத்துநர் : வேல் அமுதன்,
தொ. பே : +9411 2360488 / 4514396

**MARKANDAN & SHARMA**
Solicitors & Administrators for Oaths
*M. Markandan LL.B*
BOW BUSINESS CENTRE 153-159 BOW ROAD
LONDON E3 2SE
TEL: 020 8981 5330 FAX: 020 8981 5350
MOBILE: 07956386576

**NATHAN & CHELVA**
Solicitors
*M. Markandan LL.B*
169 TOOTING HIGH STREET TOOTING
LONDON SW17 0SY
TEL: 020 8672 1800 FAX: 020 8672 0105
MOBILE: 07956386576


AFFORDABLE RATES ! We are Open on Saturdays
Email : markandan@mssolicitors.com


**CONVEYANCING SPECIALIST**
Fast, Efficient and Friendly services in
- ✓ Residential Conveyancing
- ✓ Commercial Conveyancing
- ✓ Re - Mortgages
- ✓ Liquor Licenses
- ✓ Company Registration

**We Win No Fee Basis**
**Employment Law**
**Personal Injury**

**IMMIGRATION SPECIALIST**
Free Initial Consultation on all Immigration matters
- ✓ Immigration / Asylum
- ✓ Police station visits
- ✓ Overseas Work Permits
- ✓ Working Holiday Maker visa
- ✓ Entry Clearance Appeals
- ✓ Sponsor Letters
- ✓ Power of Attorney
- ✓ Translations / Unmarried Certificates


Link AIR
Travels Limited
5047
ATOL
PROTECTED
IATA
91-2 5704 0
SriLankan
Special Fares to : Colombo, Madras, Singapore, Canada
We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO
361 London Road, Croydon, Surrey CRO 3PB
Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579


இலண்டன் மாநகரில்
Galaxy News
உங்களுக்குத் தேவையான
விரும்பிய நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகளுக்கு
Mr. K. Alagan
GALAXY NEWS
84, Brooks Croft Road London E17 4JR
Tel : 07958 360 176 Fax : 020 8527 2324


Mierra Jewellery Mart
Gems & Jewellery
34 London Road Tooting London SW 17 9SP
Tel : 208 648 7750 www.meera_jewellery.com
பழைய
தங்கத்தில்
புத்தம் புதிய
நகைகள்
செய்து கொள்ள,
அதிர்ஷ்ட
நவரத்தின கற்களை
நியாய விலையில்
பெற்றுக்கொள்ள,
உங்களுக்குத் தேவையான
22ct சிங்கப்பூர் நகைகளை
நியாய விலையில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
தங்கம்
வாங்கும்பொழுது
தங்கம்
தெரிந்தவர்களிடம்
வாங்குங்கள்
MIERRA JEWELERY MAART

# ஒரு தலைவர் எப்படி இருக்க வேண்டும்

ஓர் ஊரிலே ஒரு மன்னர் இருந்தார். ஒரு நாள் அவர் காட்டுக்குப் போனார் வேட்டையாடுவதற்காக...!

வழியில் ஒரு இடத்தில் தங்கினார். அது ஒரு கிராமம்.

அந்த ஊருக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு சத்திரம் இருந்தது. மன்னரும் உடன் சென்றவர்களும் அங்கே இறங்கிச் சற்று இளைப்பாறினார்கள். சாப்பிடும் நேரம் வந்தது. அரண்மனையிலிருந்து கொண்டு வந்திருந்த உணவு வகைகளை எடுத்துப் பரிமாறினார்கள்.

அனைவரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். அப்போதுதான் ஒரு விவரம் புரிந்தது. அதாவது சாப்பாட்டில் உப்பு போதவில்லை. கொஞ்சம் குறைவாக இருந்தது.

உடனே மன்னர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு பணியாளைக் கூப்பிட்டார்.

'' இதோ பார்... இப்போ நீ என்ன செய்யறே... குதிரையில ஏறி நேரா அரண்மனைக்குப் போ... அங்கே போய்க் கொஞ்சம் உப்புஎடுத்துக் கொண்டு வா '' என்றார்.

அருகில் நின்று கொண்டிருந்த ஒரு அமைச்சர் இதைக் கவனித்தார். உடனே மெல்லக் குனிந்தார். மன்னரிடம் சொன்னார்.

'' அரசே கொஞ்சம் உப்புக்காக இங்கேயிருந்து அவ்வளவு தூரத்துக்குப் போகனுமா? இப்ப நாம தங்கியிருக்கிற இந்த கிராமமும் நமது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம்தானே? இங்கே ஏதாவது ஒரு வீட்டிலே கொஞ்சம் உப்பு தேவை என்றால் மலை மலையாகக் குவிந்து விடாதா? இந்தச் சின்னத் தேவைக்காக ஒரு சேவகனை அரண்மனைவரை அனுப்ப வேண்டுமா ? ''

அமைச்சர் இப்படிச் சொன்னதும் அரசர் நிமிர்ந்துப் பார்த்தார்.

'' அமைச்சரே... நீங்க சொல்ற மாதிரி இங்க வாங்கிக் கொள்ளலாம்தான். இருந்தாலும் சாப்பாட்டுக்காக நான் இங்கே கொஞ்சம் உப்பு வாங்கினேன் என்று தெரிஞ்சாப் போதும் ... நம்ம கூட வந்திருக்குற ஊழியர்கள் இந்த ஊரையே அல்லவா வாங்கிவிடுவார்கள் ? ''

அமைச்சர் பிறகுதான் யோசிக்க ஆரம்பித்தாராம்.

அரசர் சொல்வது உண்மைதான்.

ஒரு கூட்டத்துக்குத் தலைவராக இருக்கிறவர் எவ்வளவு எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு இது ஒரு சின்ன உதாரணம்.

வழிகாட்டுகிறவர் சின்னத் தவறு செய்தாலும் அவருக்குப் பின் வந்து கொண்டிருப்பவர்கள் அதையும் பின்பற்றுவார்கள். ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் இது மிகவும் முக்கியம்.

அடுத்தபடியாக அவருக்கு இருக்க வேண்டிய தகுதி வாக்கு தவறாமை.

சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக இருக்கக் கூடாது. இதற்கும் ஒரு கதை உண்டு.

ஒரு ராஜா.

அவருக்கு ஒரு நண்பர்

அந்த நண்பர் மன்னரைப் பார்ப்பதற்காக வந்தார்.

'' அரசே... என்னுடைய பிள்ளைகளுக்குத் தின்பண்டம் வாங்க வேண்டும். ஒரு ரூபாய் இருந்தால் கொடுங்களேன் '' என்றார்.

'' சரி... நீ கேட்டபடி பணம் தருகிறேன். ஆனால் அதற்கு முன்னால் நாம ரெண்டு பேரும் போய் ஒரு வில்வித்தைப் போட்டியைப் பார்த்துவிட்டு வருவோம் '' என்றார் மன்னர்.

இருவரும் புறப்பட்டார்கள். போட்டி நடைபெறுகிற இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அங்கே பெரிய பெரிய வீரர்கள் எல்லோரும் அம்புவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் எந்த அம்புமே சரியான இடத்துக்குப் போய்ச் சேரவில்லை. எல்லாம் குறி தவறிக் கொண்டிருந்தன.

மன்னர் பார்த்தார். அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

'' என்ன இது? யாருக்குமே சரியாக அம்பு விடத் தெரியவில்லை '' என்று சொல்லிக் கொண்டே ஒரு வில்லையும் அம்பையும் வாங்கினார். தன் கூட வந்திருந்த நண்பரிடம் கொடுத்தார்.

'' நீ இந்த அம்பை விடு பார்க்கலாம். ''

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



இவர் அம்பை எய்தார். அது குறி தவறாமல் போய் அந்த புள்ளியிலே குத்தியது. மன்னருக்கு இது ரொம்பப் பெருமையாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது.

உடனே ஒரு நூறு ரூபாயை எடுத்து அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதன் பிறகு போட்டியெல்லாம் முடிந்த பிறகு மன்னரும் நண்பரும் அரண்மனைக்குத் திரும்பினார்கள்.

சிறிது நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசனுக்கோ தலைக்கு மேல் வேலை இருந்தது. அதனால் நண்பருக்கு விடை கொடுத்தார். ஆனால் நண்பரோ நகருவதாக இல்லை. கடைசியில் அவர் தயங்கியபடியே.

'' மன்னா... கொடுத்த வாக்குறுதியை மறந்துட்டீங்களே ? '' என்றார்.

'' என்ன வாக்குறுதி ? '' என்றார் மன்னர் வியப்போடு.

'' எனக்கு ஒரு ரூபாய் தர்றதாச் சொன்னீங்களே... ''

'' அதுதான் நூறு ரூபாய் கொடுத்தேனே. ''

அப்போது அந்த நண்பர் மன்னனைப் பார்த்துச் சொல்கிறார்.

'' கொடுக்கிறதா வாக்களிக்காத நூறு ரூபாய் கொடுக்கிறதா வாக்களித்த ஒரு ரூபாய்க்கு ஈடேறாது. மன்னராக இருக்கிறவர் சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் முறை. ''

ஒரு தேசத்துக்கு மன்னராக இருக்கிறவர் அல்லது ஒரு நாட்டுக்குத் தலைவராக இருக்கிறவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

மன்னரிடம் வேலை பார்க்கிறவர்களும் மக்களைக் கஷ்டப்படுத்தாதவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு அரண்மனையிலே விருந்து நடந்து கொண்டிக்கிறது.

அந்த ஊர் வழக்கப்படி ஒரு எலுமிச்சம் பழத் துண்டை எடுத்து எல்லோரும் அவரவர் உணவிலே பிழிந்து கொண்டு அடுத்தவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அடுத்தபடியாக இருந்தவர் கைக்கு இது வந்து சேர்ந்தது. பிழிந்தார். சாறு வரவில்லை. உடனே அங்கிருந்த ஒரு பயில்வான் அங்கே வந்தார். அதைப் பிழிந்தார்.

ஒரு சொட்டு சாறு மட்டுமே வந்தது.

பழம் இப்போது சக்கையாகப் போய்விட்டது. இனிமேல் தூக்கிப் போட வேண்டியதுதான் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் பிறகு கடைசியாக இருந்த ஒருத்தர் அதை எடுத்தார். அவர் பார்வைக்கு நோஞ்சான் மாதிரி எலும்பும் தோலுமாக இருந்தார். இருந்தாலும் அவர் அந்த சக்கையை எடுத்துப் பிழிந்தார். ஏகப்பட்ட சாறு அதிலிருந்து கொட்டியது.

எல்லோருக்கும் ஆச்சரியம்

'' சசக்கிப் பிழியறதிலே இவ்வளவு கெட்டிக்காரராய் இருக்காரே... இவர் யார்? '' என்று கேட்டார் மன்னர்.



பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

''இவர்தான் நம்ம ஊர் ஜனங்கள் கிட்ட வரி வசூல் பண்றவர். ''

***

**யுரேனியம் :** மிகக்கடினமான, அடர்த்தியான உலோகம் யுரேனியம். 1789 ஆம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த மல்டின் எச். கிளாப்ராத் என்னும் விஞ்ஞானி கண்டுபிடித்தார். எட்டு ஆண்டுகட்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட யுரேனஸ் எனும் கோளின் பெயரை ஒட்டி யுரேனியம் என்ற பெயரைக் கொடுத்தார். 1841ல் யுரேனியம் ஆக்ஸைடிலிருந்து யுரேனியம் உலோகத்தைத் தனிமையாகப் பிரித்தெடுத்தவர் யூகின் எம். பெலிகாட் என்ற விஞ்ஞானி. 1896ல் ஹென்றி பெக்ரல் எனும் பிரான்ஸ் விஞ்ஞானி யுரேனியத்திற்கு கதிரியக்க சக்தி உண்டு என்பதைக் கண்டுபிடித்தார். தொடக்கத்தில் யுரேனியம் வண்ணக்கலவைகள், வண்ணக்கண்ணாடிகள் மருத்துவத்துறையில் பயன் பட்டுவந்த ரேடியம் ஆகியவற்றை தயாரிக்கவே பயன்படுத்தப்பட்டு வந்தது. 1939ல் ஒட்டோ ஹான், ஃபிரிட்ஸ் ஸ்ட்ராஸ்மன் ஆகிய விஞ்ஞானிகள் யுரேனியத்தின் அணுசக்தித் திறனைக் கண்டுபிடித்த பிறகு தற்போது இது அணுசக்தி மின்நிலையங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகிறது. யுரேனியத்தின் அணுஎண் 92. அது 1132°C இல் உருகத் தொடங்கும்.

## Invetigation Desk - Sivaram Murder

The first suspect found to actually be in possession of Sivaram's SIM Card was Arumugan Sriskandarajah alies Peter, employed in the capacity of a driver to Siddarthan, Sriskandarajah is a former military wing leader of PLOTE, who also holds a Norwegian passport and is a Colombo area organizer to PLOTE.


Sriskandarajah has been a member of PLOTE since the early 1980s. He was involved in the in famous coup staged in the Maldives in 1983, and as a result, he was subsequently jailed for a period for five and half years.

Director Colombo crime division, said; he has to handle this case with great care proves that apart from Siddarthan, there may well be other political figures involved. The sunday leaders infact learns there is another Tamil politician now affiliated with the Government who is a key support.

*( Spotlight, Sunday Leader 19 / 06 / 2005 )*

# முட்டைக்கோசு

ஒரு சிறந்த தசை வளர்க்கும் உணவு



முட்டைக்கோசு
முழுக்க
முழுக்க இலை
உணவுதான்.
இது ஒரு
அற்புதமான
ஊட்டம்
நிறைந்த
உணவு என்றும்
சொல்லலாம்.
அழகான
தோற்றத்துடன்
வளரும் இந்த
முட்டைக்கோசு,
இன்று உலகம்
முழுவதும்
பயிரிடப்பட்டு,
மக்களால்
விரும்பி
உண்ணப்படும்
காய்கறிகளில்
ஒன்றாக
விளங்குகிறது.

முட்டைக்கோசு தசையை வளர்ப்பதற்கும், உடலைத் தூய்மை செய்வதற்கும் மிகச் சிறந்த உணவாகும்.

முட்டைக்கோசின் தாவரவியல் பெயர் Brassica Oleracca Va என்பதாகும். மனித வரலாற்றின் ஆரம்ப காலம் முதலே இது பயிரிடப்பட்டு வருகிறது. பழங்கால கிரேக்கர்கள் இதனை முக்கியமான காய்கறிகளில் ஒன்றாகக் குறிப்பிட்டு வந்தனர். இது ரோமிலும் மிகவும் பெயர் பெற்றிருந்தது. ரோமானியர்தான் தெற்கு ஐரோப்பாவிலும், மத்திய தரைக்கடல் நிலப்பகுதிகளிலும் தாங்கள் வென்ற நாடுகளிலுல் இதனைப் பரப்பினார்கள். இது இன்று உலகமெங்கும் வெப்பமண்டல நாடுகளில் பரவியுள்ளது.

## ஊட்ட மதிப்பு

முட்டைக்கோசு கீரை என்பதைவிட காய்கறியாகவே எண்ணப்படுகிறது. இதன் ஊட்ட மதிப்பில் கனிம உப்புகளும் வைட்டமின்களும் காரத்தன்மையுள்ள உப்புகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. இவ்வூட்ட மதிப்புகளையெல்லாம் வரிசைப்படுத்தினால், பின்வருமாறு உள்ளது. உண்ணக்கூடிய 100 கிராம் முட்டைக்கோசில் நீர்மம் 91.9% , புரோட்டீன் 1.8% கொழுப்பு 0.1%, கனிம (தாது) உப்புகள் 0.6%, நார்ப்பொருள் 1.0%, கார்போஹைட்ரேட்டுகள் (மாவுச்சத்து) 4.6%.

நூறு கிராம் முட்டைக்கோசில் கால்சியம் 39 மிகி%, பாஸ்பரஸ் 44 மிகி%, இரும்பு 0.8%, கரோட்டீன் 1.200 மி.கி%, தயாமின் 0.6 மிகி%, ரைபோஃபிளேவின் 0.09 மிகி%, நியாசின் 0.4 மிகி%, வைட்டமின் சி 124 மிகி% அடங்கியுள்ளன. இதில் குளோரின், கந்தகம் போன்றவையும் செறிந்துள்ளன. இதன் கலோரி மதிப்பு 27.

## மருத்துவப் பண்புகள்

முட்டைக்கோசில் உடலைத் தூய்மை செய்யும், கழிவுகளை அகற்றிக் குறைக்கும் அற்புதமான குணம் உண்டு. இதில் குளோரினும் கந்தகமும் உயர்ந்த அளவில் அடங்கியுள்ளதோடு, அயோடினும் மற்ற காய்கறிகளில் இருப்பதைவிட அதிகமாகவே உள்ளது. இதில் உள்ள குளோரினும் கந்தகமும் சேர்ந்து இரைப்பை, குடல் பகுதிகளிலுள்ள கோழைப் படலத்தை தூய்மை செய்கின்றன. ஆனால் முட்டைக்கோசை பச்சையாகத் தின்றாலோ அதன் சாற்றை அப்படியே அருந்தினாலோதான் இது சாத்தியம்; உப்பு போடக்கூடாது.

## மலச்சிக்கல்

நமது குடல்கள் சரிவர இயங்குவதற்குத் தேவையான மொத்தையை (நார்ப்பொருள்) முட்டைக்கோசு வழங்குகிறது. புத்தம் புதிய முட்டைக்கோசினால் செய்த உணவு மலச்சிக்கலுக்கு நல்ல தீர்வாக விளங்குகிறது. இதனால் கெடுதல் ஒன்றும் இருப்பதில்லை; துரிதமாகச் செயல்பட்டு மலச்சிக்கலைத் தீர்க்கிறது. மெலிதாகத் துறுவப்பட்ட முட்டைக்கோசுடன் சிறிது உப்பு, மிளகு, எலுமிச்சைச்சாறு கலந்து இதனை தயாரித்துக் கொள்ளலாம்.

## இரைப்பையில் ஏற்படும் புண்கள்


முட்டைக்கோசு சாற்றை அருந்துவதால் உணவுக்குழாயில் ஏற்பட்டுள்ள அல்சர் புண்கள் மிக அற்புதமாகக் குணமடைகின்றன. ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் கார்னெட் செனய் MD என்பவர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இதனை ஒரு நாட்டு மருத்துவமாகத் தொடங்கி வைத்தார். முட்டைக்கோசு சாற்றில் அல்சரை எதிர்த்துக் குணமாக்கும் காரணியான வைட்டமின் யு காணப்படுகின்றது. இந்த வைட்டமின் வேகவைக்கும்போது அழிந்து விடுகிறது. முட்டைக்கோசு சாற்றை 180 மில்லி முதல் 360 மில்லி வரை எடுத்துக் கொண்டு நாள்தோறும் மூன்று வேளைகள் அருந்திவரவேண்டும் – இதனைத் தொடர்ந்து இயற்கை உணவுகளையே முற்றிலும் உண்ணவேண்டும்.

டாக்டர் எச்.கே.பாக்ரூ

முட்டைக்கோசில் டார்டானிக் அமிலம் என்று ஒரு மதிப்பு மிக்க பொருள் உள்ளது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த அமிலம் சர்க்கரையையும் பிற மாவுப் பொருட்களையும் கொழுப்பாக மாறாதபடி தடுத்துவிடுகிறது. எனவே, உடல் எடைக்குறைப்பில் முட்டைக்கோசு சாலட் சாப்பிடுவது உடம்பைத் தடிக்க விடாமல் மெல்லியதாக வைத்துக்கொள்ள ஒரு துன்பம் தராத வழி.

நூறு கிராம் முட்டைக்கோசு வெறும் 27 கலோரி ஆற்றலைத்தான் தருகிறது. அதே அளவு கோதுமை, ரொட்டி (பிரெட்) 240 கலோரிகளைத் தருகிறது. முட்டைக்கோசு அதிகபட்ச உயிர்ச்சத்துக்கள் அடங்கியதாகவும் குறைந்த கலோரி மதிப்புடையதாகவும் இருக்கிறது. மேலும், வயிற்றில் நிறைவான உணர்வையும் தருவதோடு எளிதில் செரிக்கக்கூடியதாகவும் அது இருக்கிறது.

## தோல் கோளாறுகள்



தோலில் ஏற்படும் புண்கள், தொற்று சொறியாசிஸ் உட்பட பலவித தோல் மேல் வைத்துக் கட்டுவதற்கு குணம் பெற்றவையாக உள்ளன. வைத்துக் கட்டுவதற்கும் அவை தோலில் ஏற்படும் புண்கள் மற்றும் முட்டைக்கோசின் வெளிப்புறம் உள்ள அடர் மருத்துவப் பயன் மிகுந்தவையாகவும் இலைகளை நன்கு கழுவி, ஒரு டவல் வேண்டும். முழு இலையையும் தோல் கட்டலாம்.

கண்ட புண்கள், கொப்புளங்கள், கோளாறுகளுக்கும் குருக்களுக்கும் முட்டைக்கோசு இலைகள் ஏற்ற மருத்துவ தீக்காயங்களுக்கும், கட்டிகளுக்கும் ஏற்புடையவையாக உள்ளன. இவ்வாறு கட்டிகளுக்கு வைத்துக்கட்ட பசுமையான இலைகள் சிறந்தவையாகவும் உள்ளன. இந்த முட்டைக்கோசு துண்டு கொண்டு நீரை ஒற்றி எடுக்க புண்கள் கட்டிகள் மீது அப்படியே வைத்துக்

முட்டைக்கோசு இலைகளைத் தனித்தனியாக அகற்றி, அவற்றின் பருத்த நரம்புகளைச் சீவி, அகற்றி ஒரு உருளையில் வைத்துச் சுற்றி அவற்றைத் தட்டையாக்கிக் கொள்ள வேண்டும். அவற்றை அனலில் வெதுவதுப்பாக வாட்டி மென்மையானதும் அப்படியே பாதிக்கப்பட்ட பகுதியின் மீது வைத்துக் கட்டவேண்டும். சிறிய பகுதிகளில் கட்டுவதற்கு இவற்றை பத்தைகளாக வெட்டிக் கொள்ளவும் செய்யலாம். அப்படிப் போட்ட முட்டைக்கோசு இலை மீது மெல்லிய லினன் துணியைப்போட்டு அதன்மீது மென்மையான கம்பளித்துணியைப் போர்த்திக் கட்டிவிட வேண்டும். அதன் மீது தேவையெனில் எலாஸ்டிக் பாண்டேஜ்களைப் போடலாம். இந்தக் கட்டு ஒரு பகல் – இரவு முழுவதும் இருக்க வேண்டும். அடுத்த நாள் அகற்றி வேறு போடலாம்.

## வயதுக்கு முன்னான முதுமை

மனித உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரித்து, முதுமை சீக்கிரம் வருவதைத் தடுக்கும் கூறுகளும் காரணிகளும் முட்டைக்கோசில் உண்டு என்று ஆய்வு மூலம் தெரியவருகிறது. மிகவும் சின்ன வயதிலேயே முதியவர்கள்போல் தோற்றம் தருகிறவர்களுக்கு இம்முட்டைக்கோசு மிகுந்த பயனுள்ளதாகும். முட்டைக்கோசிலுள்ள சில பொருள்கள் இரத்த நாளங்களின் சுவர்களில் திட்டுகள் உண்டாவதையும், பித்தப்பையில் கற்கள் உருவாவதையும் தடுக்கின்றன. முட்டைக்கோசில் உள்ள வைட்டமின் Pயும், Cயும் சேர்ந்து இரத்த நாளங்களுக்கு உறுதி அளிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

## பயன்கள்

முட்டைக்கோசைப் பச்சையாகவே சாலட் (பச்சடி) வடிவில் உண்ணலாம். இதை நீராவியில் வேகவைத்தும் அல்லது நீரில் போட்டு அவித்தும் உண்ணலாம். சமைக்கும்போது இதன் மதிப்பு மிக்க சத்துக்கள் பெருமளவில் இழக்கப்படுவதால் இதனைப் பச்சையாகவே உண்பது நல்லது. சமைத்த முட்டைக்கோசைவிட மிக எளிதில் செரிக்கப்படுகிறது. முட்டைக்கோசை எவ்வளவு அதிகமாக வேகவைக்கிறோமோ அவ்வளவு அதிகமாக அது செரிக்கப்படுவது கடினமாகிறது.

## முன்னெச்சரிக்கைகள்

சிலருக்குப் பச்சை முட்டைக்கோசு சாறு அருந்துவது வயிற்றில் வாயுத் தொல்லையை அல்லது பிற சங்கடமான கோளாறுகளை உருவாக்கும். வயிறு – குடல் பாதைகளில் இயல்புக்கு மாறான நிலை உருவாகியுள்ளதற்கு இது அடையாளமாகும். எனவே முட்டைக்கோசு சாற்றுடன் கேரட் போன்ற பிறகாய்கறிகளின் சாறுகளைக் கலந்து அருந்தி, இந்நிலையிலிருந்து விடுபடலாம். இத்துடன் கொஞ்சம் பெருங்காயத்தை உண்பதால் இதைச் சரிபடுத்தலாம்.

நன்றி : நல்வழி

☆☆☆

**சைவம் :** " தமிழர் தம் நுண்ணறிவின் சீரிய விளைவே சைவ சித்தாந்தத் தத்துவமாகும். இது பெரிதும் விளக்கமும், செல்வாக்கும் உடையது. ஏனைய இந்திய சமயங்களிலும் உண்மையில் பயன் பெரிதுடையது என்பதில் எனக்கு ஐயமில்லை.

–Dr. D.U போப்

# அன்புச் சமாதானம் மலர்ந்திட !

**மனித** இனத்தைப் பற்றி வருத்தும் அறியாமையும், தீண்டாமையும் சமய உலகிற்கு ஒரு அறைகூவல். இவற்றையேற்று சமாளித்து எல்லோரும் இன்புற்றிருக்கும் இனியதொரு சமுதாயம் உருவாக்கப் பாடுபடவேண்டும்.

பழைய சமயத் தலைவர்களின் செயல்கள், வாழ்க்கை முறைகளையெல்லாம் அப்படியே கடைப்பிடித்து நெறி வழுவாமல் நல்ல வாழ்க்கை அடைய சமுதாய மறுமலர்ச்சி அவசியம். '' சமயம் என்பது ஒரு தத்துவம் மட்டும் அல்ல – அது வாழ்க்கை முறை. மனிதன் இயல்பிலே நன்மையும், தீமையும் கலந்தவனாகவிருக்கிறான். ஆனால் தீமையின் பங்கு குறைவே. இன்னும் தெளிந்து மனித உலகத்தை ஒரு துன்பச் சுழற்சியில் சுற்ற வைத்திருக்கிறது. ''

## அடிப்படை வேறுபாடுகள்

சமயத்துக்கும், வேற்றுமைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உண்டு. நம்முடைய சமயஞானிகள் உயர்ந்த தத்துவங்களைச் சொன்னார்கள். தத்துவங்களை எடுத்துக்கூறிய ஞானிகளைப் பாராட்டுகின்றோம். அவர்களுக்குச் சடங்கு ஓர்வமான உணர்வற்ற வழிபாடுகளைச் செய்கின்றோம். சின்னங்கள் அமைக்கின்றோம். ஆனால் அந்த உயர்ந்த சிந்தனைகளை நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில்லை. இதனால் எங்கும், எந்த மட்டத்திலும் ஓர் அதிருப்தி நிலவுகிறது. யாருக்கும் மனநிறைவில்லை. இதை ஒரு வாழ்க்கை என்று கூறமுடியுமா?

விண்ணுயர்ந்து காட்டுகின்ற கோபுரங்களை எடுத்துவிட்டு அதன் நிழலில் அருமை மக்கள் பஞ்சைகளாக வாழ அனுமதித்தால் எங்ஙனம் கடவுளும் மகிழ்வான்? இன்று மனித உலகத்தைப் பற்றி வருத்தும் அறியாமையும், பிணியும் சமய உலகிற்கு ஓர் அறைகூவல் என்றே கருதுகிறேன். இவற்றையேற்று, சமாளித்து எல்லோரும் இன்புற்றிருக்கும் இனியதொரு சமுதாயத்தைக் காண்பதே உயர்ந்த வழிபாடு.

வழிபாடு.. '' காரியம் '' அதன் பயன் – '' இன்பம் '' இந்த உயர்ந்த நெறியினை இலங்கையில் வாழுகின்ற எல்லாப் பெருமக்களும் அன்புகூர்ந்து ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் சமயம் மனித சமூகத்தை அமைதிவழிச் செல்லச் செய்வதில் பூரண வெற்றி பெறவில்லை. ஆனால் அதற்குக் காரணம் சமயம் அல்ல. ஆனால் சமயம் வழிபாடு மட்டுமல்ல வாழ்க்கையும் கூட என்று அறியாமையால் ஏற்பட்ட தவறு இது. மீனுக்குத் தண்ணீர் இன்றியமையாதது எப்பொழுதும் இன்றியமையாதது. அதுபோல மனிதனுக்கும் சமயம் வந்துவிட வேண்டும். ஆனால் இன்றிருப்பதோ தேவைப்படும்போது உபயோகப்படுத்தப் படுவதாகவிருக்கிறது. உண்மையான சமய வாழ்க்கை வாழ்ந்தால் நிச்சயம் அமைதி பெற முடியும்.

சமய நம்பிக்கையுள்ள ஒரு நாடு பல துறைகளிலும் முன்னேற முடியும். சமயம் என்பது சூழ்வினையை, ஆக்கப் பணியை, அறிவை, ஞானத்தை ஏன் விஞ்ஞானத்தையும் கூட மறுப்பதில்லை, மறுப்பது சமயமுமல்ல. பிற்போக்கான பௌராணிக (வைதிக) சமயவாதிகள் வேண்டுமானால் மேற்கூறிய முன்னேற்றக் கூறுகளை மறுப்பார்கள். பற்றின்றி (தன்னலப் பற்றின்றி) உயர்வினைகள் செய்து பொருள் குவித்து, பல் உயிர்களையும் துய்க்கச்செய்து அவாவினைத் தணித்து, அருள்நெறிப் படுத்தலும் சமயப் பணியேயாம். இதற்குப் பெரிய புராணத்தில் நிறையச் சான்றுகள் உண்டு.

## தேவைக்கேற்ற வளர்ச்சியில்லை

சமயத்தின் இன்றைய நிலை காலத்தினுடைய தேவைக்கு தகுந்த வளர்ச்சியில்லை சமயத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காலத்தின் தேவையை ஈடுசெய்துவிட்டதாகக் கருதமுடியாது.

'' இன்று திருமுறைகளுக்கு விழா எடுப்பவர்கள் அவைகளை வாழ்க்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். திருமுறைகள் வாழ்க்கையின் வழிகாட்டிகளாகும். முன்னாளில் தமிழர்கள் எக்காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பும் திருமுறைகள் நன்றாக ஆழ்ந்துபடித்து அவைகள் காட்டிய பாதையில்தான் செயல்பட ஆரம்பித்தார்கள். ஆனால் இன்று எடுத்ததற்கெல்லாம் சோதிடர்களை அணுகி நாள் பார்க்கிறோம். பரமசிவனுக்குக் கொடுக்காத மதிப்பை, மரத்தடி ஜோசியரின் பச்சைக்கிளி கொத்தி எடுத்துவரும் சோதிடத் துண்டுக்குக் காகிதத்துக்குக் கொடுக்கிறோம். இது மிகவும் வருந்தத்தக்கது. ''

**தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் இலங்கைப் பேச்சு – 1969 மார்ச்**

## சமஸ்கிருதம் வேண்டாம்

'' தமிழர்கள் அறிவாலும், அருளாலும் முதியவர்கள் அவர்கள். அவர்களுடைய நாகரிகம், பண்பாடு காலத்தால் முற்பட்டன. எமது வாழ்வுக்கு நெறி அமைத்திருக்கும் பன்னிரு திருமுறைகளையும் எமது இல்லங்களிலும், கோவில்களிலும் தவறாது ஓதவேண்டும். கடவுளின் சந்நிதானத்தில் கன்னித்தமிழால் இயற்றப்பட்ட திருமுறைகளை ஓதாமல் சமஸ்கிருதத்திற்கு இடமளித்திருப்பது மாற்றப்பட வேண்டும். கோவில்களில் ஆராதனைகள் அனைத்தும் தாய்மொழியிலேயே தமிழ்மொழியிலேயே நடைபெற வேண்டுமென்று நீண்டகாலமாகச் சொல்லிவருகிறோம். கோவில்களின் உரிமைமொழியாக

இன்னும் சமஸ்கிருதம் நீடித்து நிலைக்குமேயானால் விரைவில் சைவம் தாழ்ந்துவிடும் என்பது உறுதி. எனவே கோவில்களில் அனைத்தும் தமிழ்மொழியிலேயே நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.''

## சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறை

'' வாழ்க்கை என்பது பெரிய கடல். அந்தக் கடலில் நீந்திக் கரை சேரவேண்டியது நமது கடனாகும். வாழ்க்கை என்ற கடலில் வீழ்ந்த நாம் பொன்னால், பொருளால், உலக இன்பத்தால் மூழ்கித் தவித்து தத்தளிக்கும்போதுதான் இறைவனை அவன்துணை வேண்டி நின்கின்ற நிலைக்குள் நிற்கிறோம்.''

'' எளிய வாழ்க்கையில் இறைவன் இவ்வளவு நிறைந்தவனாக இருக்கிறான். மின்சார விசிறி காற்றைத் தருகின்றதென நம்புகின்றோம். ஆனால் அதில் காற்றில்லை மின்சார விசிறிகள் காற்றை அசைக்கின்றன. அதுபோல் நமது கண்களுக்குப் புலப்படாமல் முருகன் நம்மையே அசைத்துவிடுகின்றான்.''

## வாழ்க்கை ஒரு போர்

நமது வாழ்வு உயர்வானது. நம்முடைய வாழ்க்கையே ஒரு போர்தான். இதில் வெற்றிபெற்றவர்கள் சிலர். தோல்வி காண்பவர்கள் பலர். ஆனால் நமது வாழ்க்கைப் போராட்டமே ஓயாது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஏற்படும் தோல்விகள் நன்மைக்கும் தீமைக்குமிடையில் ஏற்படும் போராட்டத்தில் சிலரிடையே தீமை வெற்றிபெற்றுவிடுகிறது. சிலரிடத்தில் நன்மை வெற்றி பெறுகிறது. இதுபோன்றுதான் சூரபத்மனுடைய போருமாகும்.

போர் என்றால் கடவுளோடு நாம் போர் செய்வதில்லை. கடவுள் செய்யும் போர் நமது வாழ்வை அழிக்கும் போர் அல்ல. வாழ்வை வளமாக்கும் போர்.

தீமை என்பது மனிதனுடைய செய்கையில்தான் குடிகொண்டுள்ளது இயற்கையில்லை. மனிதனுடைய இயற்கைத் தீமையை அழிக்க வேண்டுமே தவிர தீயகுணமுடையவனை அழிக்க வேண்டியதில்லை.

'' அன்பு, அருள், இன்பம் போன்ற சுவைகளை வைத்திருப்பதுதான் வாழ்வின் இலட்சியம்.''

'' சமயம் என்பது வாழ்க்கை முறை. சமயம் என்பது மனிதனின் ஆசை உணர்ச்சியை அடக்கி ஆளுவது என்பதே. அந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களும் அவரவர் சமய வாழ்வைப் படிமுறையுடன் நடந்துகொண்டால் உலகத்தில் சமாதானம் நிலவுவதற்கு வழியுண்டு.''

'' கடவுளை ஆலயத்தினுள் சிறைவைத்து, கதவைப் பூட்டி, திறவுகோலைக் கையில் எடுத்துக்கொண்டு செல்லுமளவிற்கு, தமிழனின் நவீன முன்னேற்றத் துறை உயர்ந்துள்ளது. அன்பே வடிவான ஆண்டவன் பூட்டிய ஆலயத்தினுள் எப்படித்தான் குடி இருக்க முடியும்? இந்த உண்மையை தமிழன் என்று உணர்ந்து கொள்கிறானோ, அன்றுதான் தமிழன் தன்னுடைய முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கத் தொடங்கிவிட்டதாக நம்பிக்கொள்ள முடியும்.''

'' சாதி இரண்டொழிய வேறில்லை '' என்ற ஔவையாரின் நீதியுரையை ஆசிரியர்கள் அன்று தொடக்கம், குழந்தைகளுக்கு ஒழுங்கான முறையில், ஆழ்ந்த உயர்ந்த கருத்துக்களைக் கூறி, அதன்படி ஒழுகுமாறு கற்பித்திருந்தால், சாணம், நிறைகுடம் ஆகிய பொருட்களுக்குப் புனிதத்தன்மையை ஊட்டி, கைகூப்பி வணங்கச் செய்யும் தமிழன் மனிதனைப் புனிதமாக்கி வேற்றுமையின்றி ஒன்றுபட்டு அன்புடன் வாழும்வகை கண்டிருப்பான். பொன்னின் கலத்தினுள் அழுக்கு நீரும், மண்ணின் கலத்தினுள் பாலும் வைத்திருப்பான். பருகுபவன் பானத்தைப்பற்றிச் சிந்திப்பானா? இந்த நிலையில் மனிதனின் அறிவு, திறமையைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

'' உடலெல்லாம் நீறு பூசி ஆண்டவன் தொண்டனென ஆலய உள்வீதியில் நின்று ஆண்டவனின் இன்னொரு பிள்ளையான தன் சகோதரனை ஆலயத்தினுள் வராதேயென அடிபோடும் மனிதாபிமானமற்ற ஒருவன் வெண்ணீறணியத் தகுதி உள்ளவனா?''

'' நாம் செக்கு மாடுகள் போல் வாழ்கிறோம். நின்ற இடத்தையே சுற்றிச் சுற்றி வருகின்றோம் என்று பாட்டன் காலத்திலிருந்து எமது தந்தைகாலம் கடந்து இன்று என் வரையிலும் ஓரே சமயத்திலே ஒரு புரட்சியைச் செய்தோம். மறுமலர்ச்சியைக் கண்டோமா? திருவள்ளுவர் தோன்றி திருக்குறளைத் தந்த பின்பாவது நாம் திருந்தினோமா?

மாணிக்கவாசகர் வந்து திருவாசகத்தை தந்தபின்பாவது நாம் திருந்தியிருக்கக் கூடாதா. இருபதாம் நூற்றாண்டில் நாம் வாழ்கிறோம். முன்னேற்றம் அடைவதாக எண்ணிக் கொண்டே நாம் சமயத்துறையில் பின்னோக்கிச் செல்கிறோம்.

சமய நெறிகள் மனிதவாழ்வினைச் செம்மைப் படுத்தவே உள்ளன. உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் வளர வேண்டும். சமயத்தின் பெயரால் காலத்திற்கொவ்வாத மனிதாபிமானமற்ற செயல்களை நாம் செய்வதை நிறுத்த வேண்டும்.

இமைப் பொழுதில் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்றார் மணிவாசகர் ஒரு இமைப்பொழுதே வீணாகிவிடும் என்ற கவலை அவருக்கு ஆனால் நாம் எத்தனை இமைப் பொழுதுகளை வீணாக்குகிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

## பரிபூரண வாழ்வு

'' மனித வாழ்க்கையில் சமய வாழ்வு இரண்டறக் கலக்கவேண்டும். அக்கலப்பினாலே தான் மனிதன் முழு நிறைவுக்கான பக்குவத்தைப் பெற முடியும். சமய வாழ்க்கை என்றால் மனித வாழ்க்கையின் பக்குவ நிலையாகும்.''

திருநீறு பூசி உருத்திராட்சம் தரித்து சந்தனமும் குங்குமமும் போட்டு விட்டதால் மட்டும் சமய வாழ்வு வாழ்வதாக எண்ணிவிடக் கூடாது. புறத்தால் இச்சின்னங்களைக் காட்டிச் சமய சான்றோனாய் நடித்து அகத்தால் வேறொரு வாழ்வு வாழ்வதை சமய வாழ்வு என்று சொல்ல முடியுமா?

## இதயத்தைக் கேட்கிறான் இறைவன்

கோவிலுக்கு எதையும் கொடுக்கச் சிலர் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால் கொடுக்கவேண்டிய அத்தியாவசியமான பொருளாகிய மனத்தை மட்டும் கொடுக்க அவர்களுக்கு எண்ணமில்லை.

நாவலர் பெருமக்கள் இறைவனுக்கு மனத்தைக் கொடுத்த மகான்கள். அவர்கள் இறைவனின் திருவடிகளில் தங்கள் மனத்தை ஒப்படைத்தார்கள் தங்களுக்குப் பின்னால் வரும் பரம்பரையும் தங்களைப்போலவே மனங்கொடுக்கும் பரம்பரையாகத் திகழும் என்று கருதினார்கள். நாம் அவர்கள் விரும்பியவாறு நடக்கிறோமா? சாதி உணர்வுகளை நம்மனத்திலிருந்து விரட்டாத நாம் மனத்தைச் சுத்தப்படுத்தி இறைவனுக்குக் கொடுக்கமுடியுமா?

## எல்லோருக்கும் ஓர் குலம்

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொல்வதோடு நம் கடமை முடிந்துவிடுவதில்லை. எல்லோரும் ஓர் குலம் என்ற மனப்பண்பு நமக்கு வந்தாகவேண்டும் மணம் தரும் மலர்போல நம் மனத்தினைப் பக்குவப்படுத்தவே சமய வாழ்வு பயன்படுகிறது.

'' உடல் நலம், உயிர் நலம், மன நலம் இம் மூன்றும் பேணப்பட்டால்தான் ஒரு மனிதன் வாழ்வு பூரணத்துவம் பெறுகிறது. இவைகளில் ஒன்றைத்தானும் மக்கள் பேணத் தவறின் வாழ்க்கை பூரணத்துவம் பெறமுடியாது. ''

## புரட்சியும் புதுமையும்

'' நாமெல்லாம் வயதுபோனவர்கள். இனிமேல் எவ்விதப் புரட்சியும் செய்துகொள்ள முடியாது. ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் விரும்பி திருக்குறள் கற்றுக் கொண்டால் இவ்வகையான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள முடியும். '' '' குழந்தைகள் திருக்குறள் கற்றுக்கொள்ள ஆசிரியர்கள் சுலபமான வழிமுறைகளைக் கையாளவேண்டும். ''

இரண்டாயிரம் ஆண்டுகளாக போற்றப்பட்டுவரும் வள்ளுவன் அருளிச் செய்த திருக்குறள் இன்னமும் மனித சமுதாயத்தில் ஊன்றிப் படியாமல் இருப்பது குறித்து மக்கள் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். ஆகவே மக்கள் தீயவைநீக்கி நல்லவை உணர இன்று தொடக்கம் ஒவ்வொருவரும் திருக்குறள் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

## சாதிப் பேய்

''சாதியிரண்டொழிய வேறில்லை '' என்னும் பாடல் நூற்றுக் கணக்கான வருடங்களாக நாட்டில் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு ஓதப்பட்டு வந்துள்ளது. ஆனால் இன்னமும் சாதிப்பேய் எம்மை விட்டுப் போனதில்லை. இதற்குக் காரணம் என்னவெனில் மக்கள் தாம் சரியென்று கொள்வதை நடைமுறையில் ஏற்றுக் கொள்ளாததுதான்.

'' மனிதன் சுயநலவாதியாக மாறக்கூடாது. பிறரும் நன்றாக வாழ்ந்தால்தான் அவனும் நன்றாக வாழ்க்கை நடாத்த முடியும். '' அல்லாவிடின் ஒருநாள் அவனது வாழ்க்கை தவிடு பொடியாகிவிடும். பிறருடைய வீட்டில் தீப்பிடித்தபொழுது தன் வீடுமீது நீரைக் கொட்டுவது மடமை. அடுத்த வீட்டு நெருப்பையே அணைக்க வேண்டும்.

'' மனிதரிடையே சாதிகள் இல்லை. நாய்கள்போல் சண்டை போடாது, காகம் போல் மக்கள் கலந்து வாழவேண்டும். திருஞானசம்பந்தரின் அடிச்சுவட்டில் பிள்ளைகள் வாழவேண்டும். ''

'' பிறருடைய உரிமைக்கும் மரியாதைக்கும் நாம் பாதுகாப்பாகவும் உத்தரவாதமாகவும் இருப்பது ஓர் உயர்ந்த வாழ்க்கை நெறி என்பதைத் தெளிவாக அறிந்தவர்கள் தீண்டாதார் என்று இன்று ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுக்கு உரிமை வழங்குவதில் தயக்கம் காட்ட மாட்டார்கள் என்றே நம்புகிறேன். அது நமது விருப்பம் நிறைந்த வேண்டுகோளும் கூட. ''

'' பொதுவாக தீண்டாமை ஒழிப்பு அவசிய அவசரமான பணியாகும். இலங்கையில் வாழுகின்ற இந்து, சைவப் பெரியார்கள் பேரன்பு கொண்டு நம்முடைய சமூகத்தைச் சேர்ந்த ஒரு பகுதியினருக்குள்ள உரிமையை மறுக்காமல் நீதியும் நியாயமும் வழங்க முன்வருவார்கள் என்றே நம்புகிறேன். ''

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நேரிடையான, மனப்பூர்வமான முயற்சிகளே தேவை இந்தச் சிக்கலுக்குப் பின்னணியில் வேறு ஏதாவது காரணங்களைக் காட்டிப் போடுவோமானால் தீர்வுகாண்பதற்குப் பதில் வேறுதிசையில் திரும்பிவிடும் என்பதையும் இந்தச் சமயத்தில் கூற விரும்புகிறேன். அரசாங்கக் கட்டடங்களிலிருக்கும் சுவாமி படங்கள், காரியாலயங்கள், பாடசாலைகள் வழிபாட்டிற்குரிய இடங்களல்ல.

தீமையைக் கண்டால் தூர விலகிச்சென்றால் மட்டும் போதாது தீமையை எதிர்த்துப் போராட வேண்டும். தற்போது பெருகி சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் தீண்டாமையை ஒழிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

'' விஞ்ஞானம் இன்றைய உலகில் முன்னேறி வருகிறது. ஆனால் மெய்ஞானம் இல்லாவிட்டால் எமது வாழ்வு வளம்பெறமாட்டாது. காலத்துக்கு காலம் தோன்றிய சமயப் பெரியார்கள் தத்தவ ஞானிகள் அன்பு நெறியைப் போதித்து வந்தார்கள். மனித இனத்துக்கு அன்புநெறி மிக்க அவசியமானது. ''

பொன் இரும்பு ஆகியவற்றை உருக்குவதன் மூலமும் நிலத்தைப் பலமுறை உழுது பக்குவப்படுத்துவதாலும் நாம் எண்ணியவாறு அவற்றை மாற்றியமைத்து பயன்காண முடிகின்றது. அதே போல் மனித மனமும் உள்ளம் உருகுவதால் ஆண்டவன் அருள் கிடைப்பதுடன் நாம் எண்ணிய பேறும் கைகூடுகின்றது என்பதை மணிவாசகர் அடிச்சுவடு நிலைநிறுத்துகிறது. மனிதர் ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழவேண்டும். வாழ்வை எப்படி நடாத்த வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டுவதன் மூலம் சுந்தரர் எமக்கு ஓர்அரும்பெரும் பாதையைக் காட்டியுள்ளார். உள்ளன்புடன் வழிபட வேண்டும் என்பதை ஞானசம்பந்தர் மூலமும் ஈசன் இணையடி நிழலே எமக்குக் கிடைக்கும் பேறு என்பதை அப்பரடிகள் மூலமும் நாம் அறிகின்றோம்.

பழம், பாக்கு, வெற்றிலை கொண்டு இறைவனை வணங்குகின்றோம். ஆனால் எமக்குள் சாதிபேதம் காட்டி ஆண்டவனை வணங்குவதால் யாதும் பயனில்லை நாவலர் திருமுறைகள் எமக்கு சட்ட விதிகளாயுள்ளன.

## உயர்நெறி

'' இலக்கியத்தோடு வாழ்க்கை ஒன்றி இருக்க வேண்டும். இலக்கியத்தை விட அதனைப் படைத்த ஆசிரியன் ஒரு படி உயர்ந்திருக்க வேண்டும். அப்படியிருந்தால் மக்கள் இலகுவாக உயர்நெறியைப் பின்பற்றலாம். ''

தமிழ்ச் சமுதாயம் செக்குமாடுபோல சுழலாமல் காலத்துக்கேற்றதாக முன்னேற வேண்டும். காலத்துக்கு காலம் தோன்றிய சமயப் பெரியார்கள் தத்துவ ஞானிகள் அன்பு நெறியைப் போதித்து வந்தார்கள். இந்த அன்பு நெறி மிகவும் வேண்டற்பாலது. அத்துடன் தாம் தொண்டு செய்யவும் பழகிக்கொள்ள வேண்டும். சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமந்து அடி வாங்கினார். அதற்காக நாம் இப்போது திருவிழா செய்கிறோம். பிட்டை அவித்து பிரசாதமாகக் கொடுக்கிறோம். மண்ணை மாத்திரம் அள்ளுவதை நாம் மறந்து விட்டோம். இப்பொழுது எல்லாம் சிரமதானம் என்று சொல்லப்படுகிறது எமக்குப் புதிதல்ல. எம்பெருமான் மண்சுமந்து காட்டியதுதான் சிரமதானம்.

தீமையைக் கண்டால் தூரவிலகி இருந்தால் மட்டும் போதாது. தீமையை எதிர்ப்பது உலகத்துக்கு மிகவும் வேண்டியது. எங்கள் சமுதாயத்தில் உள்ள தீண்டாமையை ஒழிப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.




ஆசிரியருக்குக் கடிதம்

இலங்கை அரசுக்கு எதிராக முக்கியமானதொரு வழக்கினைத் தொடுத்த திரு. செல்லையா கோடீஸ்வரன் அவர்களின் படத்தினை சென்ற இதழின் முகப்பில் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இவரது வழக்கினைப்பற்றி எமது இளம்தலைமுறை அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனவே இந்த வழக்குச் சம்பந்தமான ஒரு சிறு குறிப்பினைத் தரவிரும்புகின்றேன்.

1956இல் கொண்டுவரப்பட்ட அரசகரும மொழிச் சட்டமானது (தனிச் சிங்களச் சட்டம்) இலங்கை அரசியல் யாப்பின் 29வது பிரிவுக்கு முரணானதால், அச்சட்டம் செல்லுபடியற்றதாகுமென நீதிமன்றத்தில் நிரூபிக்கக் கூடிய நிலை இருந்தது. அதனை தமிழ் அரசியல் தலைவர்கள் தாமே முன்நின்று நடத்தாமல் விட்டதற்குரிய காரணத்தை எவருமே அறியார். இத்தலைவர்கள் விட்ட பல தவறுகளில் இதுவும் ஒன்றெனெ எடுத்துக் கொள்ளலாம்.

இந்தச்சூழ்நிலையில் சிங்கள மொழிச் பரீட்சையில் சித்தியடையாததைக் காரணம்காட்டி, தமிழ் அரசகரும ஊழியர்களின் சம்பள உயர்வினை அரசு நிறுத்தியது. இதற்கு எதிராக தமிழ் அரச ஊழியர்கள் தாம் மொழிவழி சார்ந்து அமைத்த, அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின்மூலம் இலங்கை அரசுக்கு எதிராக வழக்கு ஒன்றினைத் தொடுத்தனர்.

அரசியல் யாப்பின் 29வது பிரிவுக்கு முரணான அரசகரும மொழிச் சட்டமானது, சட்டவிரோதமானதென்றும் அதன்கீழ் விடுக்கப்பட்ட திறைசேரிச் சுற்று நிருபத்தால் தனது சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது செல்லுப்படியற்றது எனவும் கோரி, வழக்கினைத் தாக்கல் செய்தார். திருகோணமலையைச் சேர்ந்த திரு. கோடீஸ்வரன் அவர்களால் - அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு இலங்கை நீதிமன்றங்களினால் நிராகரிக்கப்பட்டதால் இங்கிலாந்தில் உள்ள பிரிவுக்கவுன்சில் என்ற நீதிமன்றத்திற்கு விசாரணைக்குச் சென்றது.

சம்பள உயர்வுகோரி, அரசுக்கு எதிராக வழக்கினைத் தாக்கல் செய்ய ஒரு அரசாங்கஊழியரால் முடியுமென பிரிவுக் கவுன்சில் திரு. கோடீஸ்வரனுக்குச் சார்பாகத் தீர்ப்பளித்தது. மேலும் அரசகரும மொழிச்சட்டம் சட்டவிரோதமானதா என்பதைத் தீர்மானிக்கும் விடயத்தை இலங்கை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுக்கவேண்டுமெனவும் கூறியிருந்தது.

இந்த நிலையில் தாம் தோற்கப்போவதை உணர்ந்த அரசு 1971ம் ஆண்டு பிரிவுக்கவுன்சிலுக்கு மேன்முறையீடுசெய்யும் உரிமையை இல்லாதொழித்தது. இதனால் இலங்கை நீதிமன்றங்களில் நம்பிக்கையற்று இருந்த கோடீஸ்வரனும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்களும் இந்த வழக்கினைத் தொடராமல் விட்டனர்- தனிச்சிங்கள ஆட்சிமுறை உயிர்பிழைத்துக் கொண்டது.

பிரபல்யமான சட்டத்தரணிகள் பலரைக் கொண்டிருந்த தமிழ்அரசியல் கட்சிகள் தாம்செய்திருக்கவேண்டிய பெரும் அரசியல்சேவைகளை அவர்கள் செய்யத்தவறிய காரணத்தினால் கோடீஸ்வரன் அவர்களும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் சிங்கள அரசுக்கு எதிராகத் துணிந்து செயற்பட்டனர். தாம் அரச ஊழியர்களாக இருந்தும் அரசுக்கு எதிராக வழக்குத் தொடுத்தனர். எனவேதான் ஈழப்போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியாக இவ்வழக்கு விளங்குகின்றது. பிரிவுக்கவுன்சிலுக்கு முறையீடுசெய்யும் உரிமை இருந்திருக்குமாயின் நிச்சயமாக இவ்வழக்கினை கோடீஸ்வரன் தொடர்ந்து நடாத்தியிருப்பார். வெற்றியும் அடைந்திருப்பார். அதன்மூலம் இலங்கை அரசியல் நிலையும் தமிழ்மக்களின் வாழ்வும் வேறுதிசையில் போயிருக்கக்கூடும்.

இறுதியாக இவ்வழக்கிற்காக பிரிவுக்கவுன்சில்வரை சென்று வாதாடிய திரு C ரங்கநாதன் QC அவர்களையும் மாவட்ட, மேல்நீதிமன்றங்களில் வாதாடிய திரு. திருச்செல்வம் QC அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டும்

மு. நேமிநாதன்
லண்டன்
21-07-2005

***



# திருக்காளஹஸ்தி

ஆந்திர மாநிலத்தில் திருப்பதியிலிருந்து 38 கி.மீ. தொலைவில் உள்ள பழமையான புகழ்பெற்ற சைவத்தலம் திருக்காளஹஸ்தி. இங்கு உறையும் இறைவனின் திருநாமம் திருக்காளஹஸ்தீஸ்வரன். இறைவியின் திருநாமம் ஞான பிரசன்னாம்பிகா. திருப்பதியை விடப் பழமையான இந்தக் கோயிலில் உள்ள சிவபெருமான் தானாகவே உருவான சுயம்பு என்று கூறப்படுகிறது. கி.பி. 989 முதல் 1565 வரை பொறிக்கப்பட்ட சுமார் 220 கல்வெட்டுகளின் மூலம் இந்த கோயிலின் பழம் பெருமைகளை அறிந்து கொள்ளலாம். 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் இந்தக் கோயிலைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. சிவபுராணம், ஸ்கந்த புராணம் ஆகியவையும் இந்தக் கோயிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சைவக்குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரது பாடல்களைப் பெற்ற தலம் என்ற பெருமையுடன், ஆதிசங்கரர் விஜயம் செய்து வழிபட்ட தலம் என்ற பெருமையும் இதற்கு உண்டு. தவிர முதலாம் குலோத்துங்கச் சோழன், வீரநரசிம்ம ராயர், கிருஷ்ண தேவராயர், அச்சுத ராயர் ஆகிய மன்னர்களின் விஜயத்தினாலும், அவர்களுடைய பேராதரவினாலும் தழைத்தோங்கி வளர்ந்த தலம் இது.

சிவபெருமானே பஞ்ச பூதங்களாக உருவெடுத்துள்ளார் என்ற தத்துவத்தை விளக்க, ஐந்து புனிதத் தலங்கள் தென்னகத்தில் உள்ளன. அவற்றில் திருக்காளஹஸ்தியில் சிவபெருமான் வாயு உருவத்தில் உறைகிறார். மற்ற நான்கு தலங்கள் முறையே காஞ்சி (பூமி), திருவானைக்காவல் (தண்ணீர்), திருவண்ணாமலை (தீ), தில்லை (ஆகாயம்) ஆகும்.

திருக்காளஹஸ்தியில் உள்ள வாயுலிங்கம் நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை. காற்றுப் புகமுடியாத கருவறையில் உள்ள ஐந்து வரிசை விளக்குகளில், மேல் கீழ் வரிசை விளக்கின் சுடர் மட்டும் அசைந்து கொண்டே இருக்கும். இறைவன் வாயு உருவத்தில் அங்கு உறைவதற்கு, அலைபாயும் தீபச்சுடரே சான்று. மலையடிவாரத்திலுள்ள சுவர்ணமுகி நதிக்கரையில் அமைந்துள்ள திருத்தலம் திருக்காளஹஸ்தி. கோயிலின் முகப்பு வாயிலில் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்ட பிரமாண்டமான கோபுரம் தலை நிமிர்ந்து நிற்கிறது. வெளிப்பிரகாரத்தில் விநாயகர் சன்னதி அமைந்துள்ளது. கோயிலின் மையத்தில் சிவபெருமானும் தேவியும் உள்ளனர்.

திருக்காளஹஸ்தி என்ற பெயர் வரக் காரணமாயிருந்தவை மூன்று உயிரினங்கள். அவை முறையே சிலந்தி (ஸ்ரீ அல்லது திரு), பாம்பு (காலா), யானை (ஹஸ்தி). அவை மூன்றும் அந்தத் தலத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் சிவனை வழிபட்டு வந்தனவாம். கிருதயுகத்தில் அந்த இடத்தில் ஒரு சிலந்தி சிவபெருமானுக்கு மேல் வலை பின்னி அவரை வழிபட்டு வந்தது. அதன் பக்தியை சோதிக்க விரும்பிய இறைவன், விளக்கிலுள்ள தீச்சுடர் அந்த வலையை எரிக்குமாறு செய்ய, சீற்றங்கொண்ட சிலந்தி தீயோடு போராடி மடிந்ததாம். அதன் பக்தியைக் கண்டு மகிழ்ந்து, இறைவன் அதற்கு முக்தி அளித்தாராம். பிறகு திரேதாயுகத்தில் ஒரு நாகம் இரத்தினக் கற்களைக் கொண்டு இறைவனை அலங்கரித்து வழிபட்டதாம். அதே சமயம் ஒரு யானையும் இறைவன் மீது அன்பு பூண்டு, இரத்தினங்களை அகற்றிவிட்டு வில்வ இலைகளைக் கொண்டு பூசை செய்ததாம். தனது ரத்தினங்களை அகற்றியதால் கோபங்கொண்ட நாகம் யானையோடு மோத, இரண்டுமே உயிர் துறந்தனவாம். இறைவன் அவை இரண்டுக்குமே முக்தி அளித்தாராம்.

பெரிய புராணத்தின்படி, மிகப் புகழ்பெற்ற நாயனாரான கண்ணப்ப நாயனார் இறைவனுக்குத் தன் கண்ணையே பறித்து தந்ததும் இந்தத் தலத்தில்தான். இத்தனை பெருமைகளையும் தாங்கி நிற்பதால்தான், திருக்காளஹஸ்தியை ' தட்சிணக் கைலாயம் ' என்று நக்கீரர் குறிப்பிடுகிறார்.

***

**கருத்துகளும், ஊடகமும் :** '' கருத்துக்கள் என்ற மூலப்பொருளில் இருந்துதான் மனசாட்சி உருவாகின்றது. ஆயுதங்களினால் அல்லாமல் கருத்துக்களே உலகத்தின் போராட்டத்தைத் தீர்மானிக்கும். '' '

' சக்தி வாய்ந்த ஏகாதிபத்திய ஊடகங்களில் இருந்து வரும் கருத்துக்களை ஓரளவுக்கு மக்கள் நம்பவே செய்வர். ஆனால் தமக்குக் காத்திருப்பது என்ன என்பதை அவர்கள் அறிந்து கொண்டால், விழித்துக் கொண்டால் எம்முடைய அமைப்புக்கும், சாம்ராச்சிய அமைப்புக்கும் இடையே உள்ள உண்மை நிலையைப் புரிந்து கொள்வார்கள். ''

– டாக்டர் பிடல் கஸ்ரோ

# மானுடம் சாவதில்லை

நடந்த களையோ, சுமந்த களையோ மாத்திரமன்று எமக்கு. நாம் சுமார் ஆறு மைல்களுக்கு மேல் நடந்தும் விட்டோம்தான்! தோளில் ஒரு சுமையும், கையில் இன்னொரு சுமையுமாகச் சுமக்க முடியாத சுமைகளோடு இன்னமும் நாம் நடந்து கொண்டு இருக்கின்றோம்.

என்னுடன் எனது அன்பு மனைவியும், அருமை மகளும் வருகிறார்கள். இவர்களுக்கு எங்கு புகலிடம் தேடப் போகின்றேன். ஆர் எமக்கு அபயம் அளிப்பார்கள் ? என்ன செய்வது ? ... என்றெல்லாம் தெரியாது சுமைகளோடு தொடர்ந்து போய்க்கொண்டு இருக்கின்றோம்.

பொதிச் சுமைகளை விட பொல்லாத மனச்சுமை வலுவாக அமுக்குகிறது; மனம் வலிக்கிறது. ஒரு தடவையா அகதி ? ... இது மூன்றாவது தடவை அல்லவா ! .... 1983 இல் கொழும்பு கொட்டாஞ்சேனையில் பல இலட்ச இழப்பு; என் கண்முன்னாலேயே மிகக் கஷ்டப்பட்டுத் தேடிய கலை இலக்கியக் களஞ்சியச் செல்வத்தின் எரிப்பு. 1987 முற்பகுதியில் என் சொந்த ஊரான குரும்பசிட்டி மாயெழுவில் மீண்டும் அழிப்பு; சகாயநிதி மூலதனத்தில் தோற்றுவித்த ‘ மதி அக்கடமி ’ கல்வி நிலையத்தை விட்டு ஓட்டம்; இன்று ஊரெழுவில் ! .... வீட்டைப் பூட்டியும் பூட்டாததுமாக உடுத்த ஊத்தைப் பழைய சாரத்துடன் கைக்கு அகப்பட்ட ஒரு சில பொருட்களை மாத்திரம் சூட்கேசுகளுக்குள் திணித்தபடி மீண்டும் அகதியாகி ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டு இருக்கின்றோம் !

திரும்பி உயிருடன் வரமுடியுமா ? திரும்பி வரும்போது வீடு அதே நிலையில் வீடாக இருக்குமா ? வீட்டில் வைத்த பொருள் பண்டம் விட்டு வந்த மாதிரி கிடக்குமா ? கஷ்டப்பட்டு இளைத்து இளைத்து தேடிய ஒரு சில தேடலும் உருப்படியாகக் கிடைக்குமா ? ... நினைக்க முடியவில்லை; நினைக்க மனம் வலி வலியென வலிக்கின்றதே !

ஊழித்தாண்டவத்தின் ஆரம்பமோ ? பிரளயத்தின் தொடக்கமோ ? ... எங்கும் பயம் – எங்கும் பயங்கரம் – எங்கும் பீதி !

ஹெலியின் ஆரவாரம் – ஷெல்லின் அகோரம் – துப்பாக்கி வேட்டுக்களின் அமளி.

ஆம் ! ஒரு அகோர யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது ! அதன் கோர வடிவத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது; தூரிகையால் தீட்ட முடியாது; நவீன புகைப்படக் கருவி உள்ளும் அதனை அடக்க முடியாது.

எங்கும் அகதி வெள்ளம் – பென்னம் பெரிய அலை அலையாக பெருக்கெடுத்தபடி. குழந்தைகள், வயோதிகர், கர்ப்பிணிகள், நோயாளிகள் – இப்படி, ஆயிரம் ஆயிரமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அள்ளுப்பட்டு – தள்ளப்பட்டு – அல்லற்பட்டு ....

அப்பப்பா ! எதைச்சொல்லுவது ? எப்படிச் சொல்லுவது ? எவருக்குச் சொல்லுவது ? ...

வாழையடி வாழையாக நிலமும், புலமுமாக, வசதியும் வளமுமமாக வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிமக்கள் சொத்துப்பத்துக்களை இழந்து, வீடு வாசல்களைப் பிரிந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் குறி தவறிய கணைகளாய்க் கால் கொண்டு செல்லும் தேசம் வரை போய்க் கொண்டே இருக்கின்றனரே !

வழியெல்லாம் புழுதி – புகை மண்டலம் – சுடர் விட்டெறியும் தீப்பிழம்புகள் – அதிர்வெடிச் சத்தம் – கெந்தக துர்நாற்றம் – அழிவுக்கோலங்கள் – அலங்கோலங்கள் – அல்லோல கல்லோலங்கள் .... தகர்ந்த இல்லங்கள் – சரிந்த கட்டடங்கள் – தீப்பற்றி எரியும் குடிசைகள் ! இன்னமும் என்னென்னவோ ! ...

எமக்கு நேர் முன்னாக சுமார் நூறு யார்களுக்கப்பால் ஒரு பென்னம் பெரிய ஷெல் வீழ்ந்து வெடிக்கின்றது; சிதறிப் பறக்கிறது. நாம் அந்த பெரிய அரசமர மறைவில் ஒதுங்கியதால் தப்பிப் பிழைத்தோம். இல்லாவிட்டால், இந்நேரம் சின்னாபின்னமாகி, சிதறுதேங்காயாய் அங்கமங்கமாய் சிதற அடிக்கப்பட்டுச் செத்திருப்போம்.

இப்படி, ஒரு ஷெல்லா ? ஒரு நூறா ? ஒரு ஆயிரமா ? ஆயிரக்கணக்காக அடுத்தடுத்து ... அப்பப்பா! என்ன பயங்கரம்? என்ன கொடுமை ? ...

இந்த ஷெல்கள் வேறு விதம் – வேறு ரகம். பயங்கர ஓசையோடு வெடித்து – வீறிட்டு – விசையாக முன்சென்று, மீண்டும் ஒரு தடவை பயங்கரச் சத்தத்துடன் வெடித்து பின் அதே வேகத்தில் முன் சென்று இலக்கினைத் தவிடுபொடி ஆக்குகின்றன. இப்படியாக ஷெல் தாக்குதலை நான் நேரில் கண்டது இன்றுதான் முதல் தடவை.

ஏன் இந்தப் பயங்கர ஷெல் தாக்கல் ? ... அமைதி காக்கவென வந்த இந்திய அமைதிப் படையினர் ஏன் அழிப்புப் படையினராகி விட்டனர் ? இந்தியா எமது தாய்நாடு என்றல்லவா நாம் படிப்பிக்கப்பட்டோம் .... தாய் சேயை அணைப்பதா ? படை கொண்டு அழிப்பதா ? ஒன்றும் தெரியவில்லை எனக்கு; ஒன்றும் விளங்கவில்லை எனக்கு! ... நான் சாதாரணன்; அரசியற் பக்கம் தலை வைத்துப் படுப்பவனும் அல்ல. சமரின் உட் சூத்திரம் எனக்கு எப்படி விளங்கும் ? ...

– வேல் அமுதன்

இராஜ வீதி இன்று இராஜ வீதியேதான் ! வரலாற்றுப் பெருமைமிக்க இப்பழம் நெடும் வீதியில் பல்லாயிரக் கணக்கான வாகனங்கள் அகதிகளை அடைந்தபடி பறக்கின்றன. சைக்கிள் – மோட்டார் கார்கள் – வான்கள் – ட்ரக்ரர்கள் – லொறிகள்...

பழம் நெடும் வீதி நிரம்ப பல்லாயிரக் கணக்கான அகதிகள். இரத்தக் காயங்களோடு சிலர். அழுதழுது நீர் சொரியும் கண்களோடு பலர்.

எமக்குப் பின்னே என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த நிறைமாதக் கர்ப்பிணி, அறிவு சோர்ந்து அயர்ச்சியுற்று மயங்கி விழுந்துவிட்டாள் ! அவளின் கைக்குழந்தை மண்டை அடிபட எறிபட்டுக் காயம். ஜனவெள்ளம் திரளுகிறது. மருத்துவ சேவையினரால் முதலுதவி, கைமருந்து வழங்கப்படுகிறது.

ஐயையோ! சைக்கிள் ஹாண்டலில் சிறு குழந்தையையும், பாரில் மனைவியையும் கரியரில் தாயையும்சுமந்து வந்த ' சுமைதாங்கி ' பலன்ஸ் இழந்து விழுந்து விட்டானே ! குழந்தை வீதியோரம், மனைவி ஹாண்டிலில் கொழுவியபடி, தாய் சைக்கிள் கிடக்கும் இடத்தில் இருந்து பல யார் தூரத்தில் உருண்டு புரண்டபடி. இப்படி ஒரு அவலத்தை இதற்கு முன் நாம் கண்டதில்லை! என்ன கொடுமை! என்ன அவஸ்தை ! ...

அங்கே மக்கள் வெள்ளம் திரளுகிறது; அவசர சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

நாம் எங்கே போகின்றோம் ???...

நாம் எங்கே போவது ? நாம் அனாதரவாளர்கள். உற்றார், உறவினர் என இந்தப் பகுதியில் எமக்கு ஆர் இருக்கின்றார்கள்? .... இருந்தும், நடக்கின்றோம், நடந்துகொண்டே இருக்கின்றோம். மரண பயத்தில் இருந்து விடுபட – கால் கொண்டு செல்லும் நெடும் தூர தேசத்திற்கு ! .... இந்த மக்கள் எங்கே போகின்றார்கள் ? இவர்களுக்கு எங்கே பாதுகாப்பு உண்டு ?...

'' அச்சுவேலி, புத்தூர், மட்டுவில், சாவகச்சேரிப் பகுதிகளில்

பிரச்சனை இல்லை. அங்கே போனால் ஆறுதல் ''

இப்படிக் கதை அடிபடுகிறது .

'' என்னப்பா செய்வது ? தமிழனின் தலைவிதி இது. சொந்த நாட்டில் அகதி நிலை – அவலநிலை – வீட்டையே விட்டு ஓடும் நிலை. ''

'' ஓட்டமா ? ... அண்ணை நாங்க பட்டபாடு... தோட்டத்துள் விழுந்து – முள்ளுக்கம்பி வேலியிக்காலை பூந்து – இங்கை பாருங்கோ : முதுகெங்கும் புண் – இரத்தக் கறை – வலி – எரிவு. அடக் கடவுளே ! பட்டபாடு போதுமெண்டால் போதும் ! ''

'' எங்கடை அப்பு நாலடி வேலி பாய்ந்திருக்கிறார் அண்ணை. நம்ப முடியுமா ? அவன்கள் வளவுக்குள் வந்ததுக்குப் பிறகுதானே அவர் ஓட்டம். ஓட முடியுமா ? எப்படியோ ஓடினார் – நாய் ஓட்டம்தான் ! ''

'' கோதாரி வருவான்கள் கண்ட நின்றபடி சுடுகிறாங்கள். சீக்கியர், கூர்க்கா எனப் பல சாதிக்காரங்கள். எங்கடை பாஷையும் விளங்குது இல்லை. இந்த அப்பாவி மக்களைச் சுட்டு விழுத்துவதா ? இந்த அநியாயம் எப்ப ஒழியுமோ ?... ''

'' எல்லாம் எங்களாலை வந்த வினை அண்ணை. எங்களுக்குள்ளை ஒற்றுமை உண்டோ ? முப்பத்திரண்டு பிரிவு. இது போதாது. இன்னும் எங்களுக்கு வேணும் அண்ணை .''

இப்படி, அந்த அவலத்துக்குள்ளும் கலந்துரையாடி – கருத்துப் பரிமாறி மக்கள் அங்கலாய்க்கிறார்கள். இவர்களின் உரையாடல்களுக்குக் காது கொடுக்க அமைதி ஏது ? ஆறுதல் ஏது?... எனது பிரச்சனை இதுமட்டுமல்ல; எனது உடலிலும், மனத்திலும் மாத்திரம் தான் சுமைகளும் அல்ல; சுவாசத்திலும் கோளாறு உண்டு.

எனக்கு இழுப்பு – ஆஸ்மா நோய் !

வழமையாய் பொக்கற்றுள் பத்திரமாக இருக்கும் பிறிற்னிசோலின் (Prednisoline) அஸ்மா மாத்திரைகளை அவசரத்தில் இன்று வெளிக்கிட்டதால் எடுத்துவர முற்று முழுதாக மறந்தும் விட்டேன். மாத்திரை டப்பியை மறந்தது எப்படி என்பது எனக்கே புரியவில்லை. மருந்தை மாத்திரமா மறந்தேன் ? ... ஏதோ கெட்ட காலம் ! பழைய ஸ்ரைலான றலி சைக்கிளையுமல்லவா அடியோடு மறந்துவிட்டேன். சைக்கிளும் கையுமாக தொழில் அலுவலாக அலைந்து திரியும் நான் சைக்கிளைப் பூட்டிப்போட்டு வரவும் மறந்துவிட்டேன். இனி எனது சைக்கிள் எனக்குக் கிடைக்குமா ?....

தோட்டங்களுக்கூடாக ஊரெழு – நீர்வேலி றோட்டில் ஏறிய நாம், காசிப்பிள்ளை கடைச் சந்தியைக் கடந்து, குறுக்குப் பாதையால் ராஜ வீதிக்கு வந்து, சிறுப்பிட்டிச் சுடலைப் பகுதியைத் தாண்டி, கூட்டுறவுக் கடையையும் தாண்டி ... மேலே செல்ல முடியாமல் வலுவாக இளைத்து, தாண்டித் தாண்டி மெல்ல மெல்ல நத்தை வேகத்தில் நகருகின்றோம்.

ஐயோ, இப்போது ஆஸ்மா நோய் ஆரம்பித்துவிட்டது !

பலமாக இரைச்சலோடு இழுப்பு ஆரம்பித்து விட்டது ! இனி என்னால் நடக்க ஏலாது என எனது மனைவி, மகளிடம் கூறிய நான் வீதி ஓர மதகுக் குந்து மதிலில் குந்தி விட்டேன்.

மதகு மதிலில் குந்தியதுதான் எனக்குத் தெரியும். பிறகு கண்விழித்து எழும்பியது இரண்டு மணிக்கு.

இவ்வளவு நேரமாக நான் படுத்திருந்தது எங்கே ?... சிறுப்பிட்டி கமக்காரர் ஒருவரின் சாப்பாட்டு மேசைமேல். '' எனக்கு என்ன நடந்தது, என்ன நடந்தது '' என நான் என் மனைவிடம் ஆவலோடு விசாரிக்கின்றேன்.

நான் அறிவு மயங்கி விழுந்ததாகவும், கமக்காரன் வீட்டுக்காரர் என்னைத் தூக்கிச் சென்று பரிகாரம் செய்ததாகவும் சொல்லப்பட்டது. கமக்காரனின் இரண்டாவது மகள் சித்த வைத்தியராம். அவர் ஆஸ்மா ஊசி ஏத்தி எனது இழுப்பை தணித்ததாகவும் சொல்லப்பட்டது.

சிறுப்பிட்டிக் கமக்காரன் வீடு திட்டமிட்டுக் கட்டப்பட்டதல்ல. தேவை ஏற்பட ஏற்பட விஸ்தரிக்கப்பட்ட வீடு அது. இன்று வீடு நிரம்ப அகதிகள். ஐம்பது பேரினைத் தாண்டிய எண்ணிக்கையினர். கமக்காரனும் எப்படியோ அனைவரையும், அனைத்தையும் சமாளித்து ஆறுதல் அடைகின்றார்.

பெருமனத்துடன் கமக்காரன் வந்தோரை வரவேற்று அன்போடு ஆதரிக்கின்றார். இந்த விந்தையை ஜீரணிக்க முடியாமல் நான் திக்குமுக்காடிக் கொண்டிருந்த வேளை,

'' தம்பி என்ன யோசனை ? இது உங்கடை வீடு. நாங்கள் வேறு யாரும் அல்ல. உங்கடை வீட்டாரே நாங்கள் எண்டு நினையுங்கோ. இஞ்சை ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை என்று கமக்காரன் என்னை ஆறுதல் படுத்துகின்றார். ''

'' தம்பி ஹொர்லிக்ஸ் தெம்புக்கு குடியுங்கோ ''

வீட்டுக்கார அம்மா எனக்கு ஹொர்லிக்ஸ் கரைத்து வந்து அன்பாகக் குடிக்கத் தருகின்றார்.

எனக்கு ஹொர்லிக்ஸ் தந்தபின், நான் படுத்திருந்த அதே அறை மூலையில்,தோள் மூட்டில் காயங்களோடு நோவலியின் அவஸ்தையால் முனங்கலோடு கிடக்கும் அவர்களின் மகனுக்கும் ஹொர்லிக்ஸ் கொடுக்கப்படுகிறது.

எனக்கு ஆச்சரியத்தக்கு மேல் ஆச்சரியம் !!! சொந்த மகனைவிட விருந்தாளி முக்கியமா ? ஆவலோடு ... '' தம்பிக்கு என்ன ? ஏன் பத்து போட்டிருக்கு ? என்ன நடந்தது ? '' எனக் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு விசாரிக்கின்றேன். எனது கேள்விகளுக்கு கமக்காரன் பதில் சொல்கின்றார்.

'' அவன் எனது இளைய மகன் தம்பி. நேற்று எங்கடை பசு மாட்டிலை பால் கறந்து கொண்டு இருக்கையில் தோட்டத்தில் விழுந்து வெடித்த ஷெல் ஒன்று பசுவின் குடலைக் கிழித்து அவனின் தோள்பட்டையைப் பதம் பார்த்து விட்டது. .. அதைப் பற்றி நீங்கள் யோசிக்க வேண்டாம். அவனுக்குக் காயம்; அவன் காயப்பட்டவன் என்று யோசிக்க வேண்டாம். எனக்கு கஸ்டம் என்றும் நினைக்க வேண்டாம். எனக்கு பிள்ளை குட்டியள் என்றும் யோசிக்க வேண்டாம். வீடு நிரம்ப அகதிகள், ஆட்கள் எனவும் யோசிக்கவும் வேண்டாம். வீட்டிலை இன்று நீங்க ஐம்பத்தொன்பதாவது ஆள் என்பது உண்மைதான்! ... ஆனால், ஆபத்திலை உதவுதல் எங்கடை கடன். உங்களை எங்கள் அடியில் கொண்டு வந்தது எங்கடை செல்லச் சந்தியாவின் பெருங்கருணைதான்.

நான் உங்கடை தகப்பன்போலை. பிரச்சனை தீரும்வரை ஒரு பயமும் இல்லாமல் உங்கடை வீடாக இதை நினைத்து நீங்கள் இங்கேயே தங்க வேணும். ''

எனப் பாசமிகுதியோடு எம்மை வேண்டிக் கொண்டு இருக்கையில்

'' தம்பி நீங்கள் இங்கேயே தங்க வேணும். ''

என அந்த வீட்டுக்கார அம்மாவும் விண்ணப்பிக்கின்றார்.

எனக்கு இந்தக் காருண்யம் பேரதிர்ச்சியைத் த ருகிறது. இளைய மகனின் முனக்கம் – முணுமுணுப்பு தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டே இருக்கிறது. வாய் என்னை மறந்து தன்வாரியாக ' மானுடம் சாவதில்லை ' என உச்சரிக்கின்றது.

சஞ்சீவி-1989

❖ ❖ ❖

## முத்தையன் கட்டுக் குளத்திலிருந்து மின்சாரம்

முத்தையன் கட்டுக் குளத்தின் நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி விவசாயக் குடும்பத்தவர் ஒருவர் மின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதையறிந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் அவருக்கு ஊக்குவிப்பு உதவியாக ஒரு இலட்ச ரூபா நிதியுதவி வழங்கினர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முத்தையன் கட்டு வலதுகரையில் விவசாயம் மற்றும் கூலித்தொழில் புரிந்து வரும் பசுபதி இராதாகிருஷ்ணன் என்பவர் முத்தையன் கட்டுக் குளத்திலிருந்து வடிந்து செல்லும் மேலதிக நீரைத் தேக்கி, அந்த நீர்த் தேக்க அணைக்கட்டில் 10 அங்குல விட்டமுள்ள ஒரு பெரிய குழாய் ஒன்றைப் பொருத்தி அந்தக் குழாயிலிருந்து நீரை 15 அடி நீளம்வரை கீழ்நோக்கி விழச்செய்து, கனதியான இரும்புத் தகடுகளிலான விசிறியைத் தயாரித்துப் பொருத்தி அந்த விசிறியின் சிறகுகளில் நீரை விழச்செய்து விசிறியை சுழலவைத்து மின் பிறப்பாக்கியை (டைனமோ) இயக்க வைப்பதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றார்.

இதனை அறிந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அவரது இல்லத்துக்குச் சென்றுமின்சாரம் உற்பத்தி செய்யும் தொழில் நுட்ப முறையினை நேரில் பார்த்து முயற்சியைப் பாராட்டியதுடன் அவரை மென்மேலும் ஊக்குவிக்கும் நோக்கில் ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியையும் ஒரு புதிய துவிச்சக்கர வண்டியையும் அவருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதேவேளை, நீண்டகாலமாகத் தான் கூலித் தொழிலையே மூலதனமாகக் கொண்டு வாழ்ந்து வருவதாகவும், இவற்றுக்கும் மத்தியில் வீட்டோடு ஏதாவதொரு சொந்தத் தொழிலைச் செய்ய வேண்டுமென்ற உத்வேகம் தன்னுள் குடிகொண்டிருந்ததாகவும் அவ்வாறு ஒரு சொந்த தொழிலைச் செய்வதானால் மின்சாரத்தின் அவசியத்தையும் தான் உணர்ந்ததன் வெளிப்பாடே இந்த மின்சார உற்பத்தியில் தனது அன்றாடக் கூலி உழைப்பையும் செலவு செய்து ஈடுபடவேண்டியதன் தேவையும் ஏற்பட்டது என்று இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தற்போது தன்னிடமுள்ள வளத்தைப் பொறுத்து பெறுகின்ற மின்சாரத்தின் மூலம் தனது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் கொண்ட குடும்பத்தையுடைய வீட்டுக்கும், அருகிலுள்ள கோவில் ஒன்றுக்கும், சிலவேளைகளில் அயலில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்கும் வழங்கக்கூடியதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்சாரம் பெறுவதற்கு வசதியின்மை காரணமாக பழைய அலுமினியப் பானைகளை வாங்கி அவற்றை மெல்லிய இழைகளாக தகடு வெட்டும் கத்திரிக் கோலைக் கொண்டு வெட்டி அவற்றையே ஒன்றோடொன்று பொருத்தி மின் கடத்திகளாகப் (வயர்களாக) பயன்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

நன்றி : தினக்குரல்

# அரவணைத்த தமிழர் அரசியலும் 'அங்காடி'களான முஸ்லிம் தலைவர்களும்

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் உறவில் முறுகல் நிலை ஏற்படுத்தப்பட இன்று பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் எதிர்காலப் பெறுபேறு எவ்வாறு அமையப் போகின்றது என்பதை ஆராய்வதற்கு முன்பு ஒற்றுமையாக, ஒன்றுபட்டுச் செயற்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் உறவில் விரிசலை ஏற்படுத்திய முன்னோடிகள் யார் என்பதை இளைய சமுதாயம் அறிந்து கொள்வது அவசியமானதாகும்.

வெறும் உணர்ச்சி வயப்படுத்தும் அறிக்கைகளாலும், பேச்சுகளாலும் தமது அரசியல் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளத் துடிப்புடன் செயல்படும் அரசியல்வாதிகள் குறிப்பாக முஸ்லிம் அரசியல் வாதிகள் சமுதாய நலனை முன்னிலைப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் உறவை வளப் படுத்தி முஸ்லிம் மக்கள் எதிர்காலத்தில் நிம்மதியாக வாழ வழிகாட்டுவது காலத்தின் தேவையாகும்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் மேற்குக் கரையிலிருந்து போர்த்துக்கீசரால் அச்சுறுத்தப் பட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின் அனுசரணையுடன் கிழக்குப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். அப்போது கிழக்கிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் தமிழ்பேசும் மக்களாக விளங்கிய முஸ்லிம்களை வரவேற்று, வாழ இடமளித்து, அரவணைத்தனர் என்ற வரலாறு மறக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாதது மட்டுமல்ல மறக்கக்கூடாததும் கூட. இவை சில நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவங்கள்.

கிழக்கில் இன்றுள்ள முஸ்லிம்களின் முன்னோர்களில் பலர் தமிழர்கள், இந்துக்கள் என்பதும் மறைக்கப்பட முடியாத உண்மை, ஒரே மரபில் வந்தவர்களில் கணிசமானவர்களே இன்று தமிழர்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும் வேறுபட்டு நிற்கும் வேடிக்கை நிகழ்கின்றது.

வரலாறு இவ்வாறிருக்க இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவான முஸ்லிம் அரசியல் வாதிகளில் பதவி நோக்கிய செயற்பாடுகள் தமிழ், முஸ்லிம் உறவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாக அமைந்தன.

தமிழ் பேசும் மக்களாகிய தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்பாக விளங்கிய தமிழரசுக்கட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் அமைப்பாக 1956 முதல் விளங்கத் தொடங்கியது.

தமிழரசுக் கட்சி, தமிழர்களை மட்டுமல்ல, முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியாக விளங்கியது. முஸ்லிம்களும் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிட்டு தமிழர்களதும், முஸ்லிம்களதும் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

1956 இல் தமிழரசுக்கட்சி சார்பில் கல்முனைத் தொகுதியில் கேட்முதலியார் எம்.எஸ். காரியப்பரும் நிந்தவூர் தொகுதியில் எம்.எம். முஸ்தபாவும் போட்டியிட்டு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் வெற்றி பெற்றுப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனால், இவ்விருவரும் தமக்கு வாக்களித்த தமிழ் பேசும் மக்களைக் கைவிட்டு தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வந்த அன்றைய பண்டாரநாயக்க அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். வரலாற்று உண்மைச் சம்பவமான இந்நிகழ்வு தமிழ்பேசும் மக்களது உரிமையைப் பறிப்பதற்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் கொடுத்த முதல் முட்டுக் கொடுப்பாகும்.

அது மட்டுமல்ல கேட்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் குடியேற்றத்தை வாழ்த்தி, வரவேற்று முஸ்லிம்கள் அம்பாறை மாவட்டத்தில் இன்று காணிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கவும் வழி செய்தவராவார் என்பதும் வரலாற்றுப் பதிவாகும். தமிழரசுக் கட்சி திட்டமிட்ட, சிங்களக் குடியேற்றங்களை கிழக்கு மாகாணத்தில் எதிர்த்தபோது முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டு வரவேற்றனர்.

1960 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் கல்முனையிலிருந்து எம்.சீ.அகமதுவும், நிந்தவூர், பொத்துவில் தொகுதிகளிலிருந்து இரு அப்துல் மஜீதுகளும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யபட்டனர்.

நடந்தது என்ன ? கல்முனையிலிருந்து தமிழரசுக்கட்சி சார்பில் தெரிவான எம்.சீ.அகமது ஆளும் சுதந்திரக் கட்சிக்குத் தாவினார். மற்ற இருவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறினர்.

இவர்களில் எம்.எம். முஸ்தபாவும், பொத்துவில் மஜீதும் மந்திரி பதவிகளையும் பெற்றனர். எத்தனை பேர் கட்சி மாறினாலும் தமிழ் மக்களால் வழிநடத்தப்பட்ட தமிழரசுக்கட்சி அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களுக்குரியதென்று செயற்பட்டது.

கல்முனை மருத முனையைச் சேர்ந்த மசூர்மௌலானா என்பவரைத் தமிழரசுக்கட்சி மூதவை (செனட்) உறுப்பினராக்கியது. பதவிகிட்டிய கையோடு அவரும் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டார்.

பொத்துவில் தொகுதியிலிருந்து தமிழர் ஒருவர் தெரிவாகும் வாய்ப்பு இருந்தபோதும் நடராஜா தர்மலிங்கம் என்பவர் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட 1970 ஆம் ஆண்டு விண்ணப்பித்திருந்தார். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழர்களால் தலைமை தாங்கப்பட்ட தமிழரசுக்கட்சி என்ன கூறியது என்பதை இன்று எல்லோரும் மறந்துவிட்டனர். அன்றைய சம்பவங்களை இன்று ஞாபகப்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

'' அம்பாறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு முஸ்லிம்களே தெரிவு செய்யப்பட வேண்டும். தமிழர்களுக்கு,

**வரலாற்று ரீதியான ஒரு கண்ணோட்டம்**

வெற்றிவாய்ப்பு இருந்தாலும் தமிழர்கள் முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுக்கவேண்டும். அதனால் முஸ்லிம்களையே அம்பாறை மாவட்டத்தின் சகல தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சி தேர்தலில் நிறுத்தும் '' இவ்வாறு தமிழரசுக் கட்சி கூறியது மட்டுமல்ல நடைமுறையிலும் காட்டியது.

1970 இல் பொத்துவில் தொகுதியில் தமிழரசுக்கட்சி அப்துல்காதர் என்பவரை வேட்பாளராக நிறுத்தியது. தமிழரசுக் கட்சியில் வேட்பு மனு கேட்டு நிராகரிக்கப்பட்ட தர்மலிங்கம் சுயேச்சையாகப் போட்டியிட்டு சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். தமிழரசுக்கட்சி சார்பில் தர்மலிங்கத்தை 1970 ஆம் ஆண்டு தேர்தலில் வேட்பாளராக நிறுத்தியிருந்தால் தமிழ் மக்களின் ஆதரவுடன் 1970 ஆம் ஆண்டே அம்பாறையில் தமிழர் ஒருவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பார்.

வெற்றி வாய்ப்பை விட அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதிப் படுத்துவதிலேயே தமிழ் அரசியல் தலைமை உறுதியாக இருந்தது என்பதை மீண்டும் ஞாபகத்தில் கொள்ள வேண்டியது வரலாற்று, அரசியல் கண்ணோட்டத்தில் அவதானிப்போர் கடமையாகும்.

யாழ்ப்பாணத் தமிழர்களை 1970 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தலைவர்களாகக் கொண்டு செயற்பட்ட தமிழ் அரசியல் கட்சி அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்த எவ்வாறு செயற்பட்டது என்பதையும், அத்தலைமைத்துவத்தின் அரசியல் நாகரித்தையும் தமிழ் பேசும் மக்கள் எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி தமிழர் ஒருவரும் தெரிவாகக் கூடியதாக வகுக்கப்பட்டது.

1960 இல் மூதூரிலிருந்து ஏகாம்பரம் என்பவர் தமிழரசுக்கட்சி சார்பில் தெரிவானார். அப்துல் மஜீத் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினார். 1962 இல் ஏகாம்பரம் காலமான போது எம்.ஈ.எச்.முகமதலி என்ற முஸ்லிமை தமிழரசுக்கட்சி மூதூரில் நிறுத்தி வெற்றி பெறச் செய்தது.

1965 பொதுத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சி முகமதலியையே வேட்பாளராக நிறுத்தியது. தமிழ் மக்களது பூரண ஆதரவுடன் முகமதலி மூதூரில் வெற்றி பெற்றார். தமிழ் மக்களுக்குரிய பிரதிநிதித்துவம் தமிழர் தலைமையால் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டமைக்காகத் தமிழ் மக்களும் மனப்பூர்வமாக ஆதரவு வழங்கி முகமதலியைத் தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்தனர்.

ஆனால், தமிழர்களின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட முகமதலி அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தாவினார்.

1988 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்ட தமிழ்க் குழுவின் சார்பில் இரண்டு தமிழர்கள் தெரிவாகினர். அத் தமிழ்க்குழு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு தமிழரைப் பதவி விலகச் செய்து பஷீர் என்ற முஸ்லிம் பிரமுகரைப் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தது.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழரைப் பதவிவிலகச் செய்து சகோதர முஸ்லிம் ஒருவரைப் பாராளுமன்ற உறுப்பினராக்கியது ஆயுதக் குழுவாக இயங்கி அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட ஈரோஸ் என்ற தமிழர் இளைஞர் குழு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தமிழ்க்குழு பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்ததால் இக்குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்தனர். தற்போதைய தேர்தல் முறைமையின் படி சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிலிருந்தோர் தாம் பெற்ற வாக்கின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்படுகின்றனர்.

பதவியிழந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் வெற்றியிடங்களுக்கு அடுத்தடுத்து இருந்த தமிழர்கள் நியமனம் செய்யப்பட்டபோதும் அவர்கள் அப்பதவிகளை ஏற்கவில்லை.

ஆனால், பட்டியலில் இறுதியிலிருந்த வன்னி மாவட்டத்து அயூப் என்பவரும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சேகுதாவூத் என்பவரும் பதவியேற்றுப் பாராளுமன்றம் சென்றனர். பின்னர் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் அனுசரணையாளர்களாகினர். தாம் இணைந்து போட்டியிட்ட தமிழ்க்குழுவின் கொள்கைக்கு மாறாகச் செயற்பட்டனர்.

இவையெல்லாம் நமது நாட்டின் அரசியல் நிகழ்வுகள், வரலாற்றுச் சம்பவங்கள். தமிழ் மக்களின் வாக்குகளால், தமிழ் அரசியல் தலைமைகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள். பாராளுமன்றம் சென்ற மேற்கூறப்பட்ட அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் தமிழ், முஸ்லிம் உறவின் சீர்கேட்டுக்குக் காரணங்களாயமைந்தன.

வரலாற்று ரீதியாக நோக்கும்போது தமிழ் அரசியல் தலைமையோ, பேராட்டக் குழுவாக இயங்கிய தமிழ் அரசியல் குழுக்களோ முஸ்லிம்களது அரசியல் உரிமையைப் பறித்ததாகக் கூறமுடியாது.

வரலாற்று ரீதியாக நோக்கும்போது அரசியல் தலைமைத்துவங்களோ, தமிழ் மக்களோ தமிழ் பேசும் சகோதர முஸ்லிம்களது அரசியல் உரிமையை, இருப்பை நிலை நிறுத்துவதில் முன்னின்று செயற்பட்டுள்ளமையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பது மட்டுமல்ல கவனத்தில் கொள்ளாமல் விடவும் கூடாது.

இன்றைய தலைமுறை நடந்து முடிந்த வரலாற்று நிகழ்வுகளையும் தற்போது நடைபெற்று வரும் அரசியல் செயற்பாடுகளையும் சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

ஆடுகள் இரண்டு முட்டி மோதி சண்டையிட பார்த்திருந்த நாய் ஒழுகும் இரத்தத்தை ருசி பார்த்த கதையாக தமிழ், முஸ்லிம் விரிசல் அமைந்துவிடக்கூடாது.

பல நூற்றாண்டுகள் ஒற்றுமையாக வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தற்காலிகப் பட்டம், பதவி, பொருளாதார, சுயநோக்கங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற்படாமல் எதிர்காலத்திலும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஒற்றுமையாக இணைந்து நிம்மதியாக வாழ வேண்டும். இதுவே நோக்காக அமைய வேண்டும்.

அரசியல்வாதிகள் இன்று வருவார்கள். நாளை போய்விடுவார்கள், மக்கள் அவ்வாறல்ல. பசப்பு வார்த்தைகளுக்கு மயங்காது எதிர்காலச் சந்ததியின் நலனுக்காகச் செயற்படவேண்டும் – செய்வீர்களா ?

( நன்றி : தினக்குரல், இலங்கை )

☆☆☆

# ஒரு கருத்துக்கணிப்புத் தாருங்கள்

கடந்த 25 இதழ்களிலும் வெளிப்படுத்தப்பட்ட ஆக்கங்கள், செய்திகள், விளம்பரங்கள், ஆசிரியத் தலையங்கம் மற்றும் இலண்டன் வாழ்வின் அனுபவங்கள் பற்றிய ஒரு முழுமையான கருத்துக் கணிப்பினை எமது வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். தயவுசெய்து இவ்வறிவிப்பினை உதாசீனம் செய்துவிடாதீர்கள். உங்கள் விருப்பு வெறுப்புகளும் எங்கள் குறை நிறைகளும் சுதந்திரமாக சுட்டிக்காட்டப்படலாம். அது நிச்சயமாக எம்மைத் தூய்மைப்படுத்தவும், துரிதப்படுத்தவும் உதவும். கட்டாயம் கவனத்திலெடுங்கள் :

1. தமிழர் தகவலின் முகப்பின் அமைப்பு உங்களைக் கவர்கிறதா ?
2. அதில் எழுத்துப்பிழைகள் இருக்கின்றனவா ?
3. அதன் உள்கட்டமைப்பு எப்படி ?
4. கணினி அமைப்பும், கலர் தெரிவும் எப்படி ?
5. ஆசிரியத் தலையங்கம் உங்களை ஈர்த்ததா ?
6. செய்திச்சிதறல்கள் / கருத்துக் கவிதைகள் எப்படி ?
7. விளம்பர அமைப்பு / அதன் மாற்றங்கள் எப்படி ?
8. ஆக்கங்கள் சமூகத்தேவைக்கானவையா ?
9. சோதிடம் பகுதி – அதனால் பயன் உண்டானதா ?
10. உரிய காலத்தில் தமிழர் தகவல் உங்கள் கரம் கிடைக்கிறதா ?
11. எந்தப்பகுதியில் எந்தக் கடையிலிருந்து பெற்றுக் கொள்கிறீர்கள் ?
12. நீங்கள் தமிழர் தகவலில் எழுதியதுண்டா ?
13. இலண்டனில் உள்ள கடைகளிலிருந்து நீங்கள் பெற்றுக் கொள்ளும் பொருட்களின் தரம் எப்படி ?
14. அதன் தெரிவு என்ன ?
15. அப்படித் தெரிவு செய்யப்பட்ட தரத்தின், சுவையின் ஈர்ப்பு எப்படி ?
16. இலண்டனில் உங்களுக்குப் பிடித்தமான நகைக்கடை நிறுவனம் எது ? ஏன் ?
17. இலண்டனில் உங்களுக்குப் பிடித்தமான புடவைக்கடை நிறுவனம் எது ? ஏன் ?
18. இலண்டனில் வெளிவரும் பிரசுரங்களில் (பத்திரிகை / சஞ்சிகை) உங்களுக்குப் பிடித்தது எது ? ஏன் ?
19. இலண்டனில் அதிகம் பிரசுரமாகும் பத்திரிகை / சஞ்சிகை எது ? காலம் எவ்வளவு ?
20. இலண்டனில் நடக்கும் கலாசார நிகழ்வுகளில் நீங்கள் பங்கேற்பதுண்டா ?
21. இலண்டனில் தாயகத்தை நினைவுபடுத்தும் உணவு வகைகள் தரும் தரமான உணவுச்சாலைகள் எவை ?
22. நீங்கள் அநேகமாகப் பாவிக்கும் மிளகாய்த்தூள் எது ? எங்கு கிடைக்கிறது ? அதன் தரம் எப்படி?
23. நீங்கள் விரும்பிப் பார்க்கும் நாடகங்கள் / நடனங்கள் பற்றி
24. அதன் தயாரிப்பாளர்கள் / இயக்குனர்கள் பற்றிய எண்ணம் ?

இவ்விதழில் இணைக்கபட்டிருக்கும் கடித உறையுள் உங்கள் எண்ணங்களை எழுதி அனுப்புக.
தரமானவை சன்மானத்துக்குரியவை.

– நிர்வாகி, தமிழர் தகவல்
இலண்டன், 01.08.2005

## லட்சுமி ஜுவலர்ஸ் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டி


8-வது குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெற்றவர்

**R AISHWARYA**
42 Malmesbury Road
Morden SM4 6HE

இவருக்கு £ 25 காண பணம்
லண்டன் **லட்சுமி ஜுவலர்ஸ்**
நிறுவனத்தாரால் அனுப்பி வைக்கப்படும்

### குறுக்கெழுத்துப் போட்டி விடை

| | | | | |
|---|---|---|---|---|
| சி | வ | ரா | ம் | சி |
| ங் | ம் | சா | ழு | று |
| க | லி | த் | தொ | கை |
| ள | கா | தி | ம் | பு |
| ம் | ம | ற | வ | ன் |




**LAKSHMI JEWELLERS**
276 High Street North
EASTHAM E12 6SA
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448




### குறுக்கெழுத்துப் போட்டி (9)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 அ | | 2 கொ | | 3 தா |
| | | | | |
| | 4 க | | 5 க | 6 நா |
| | | 7 பு | | |
| 8 கா | | | | |

<u>இடமிருந்து வலம்</u>

1. இலண்டன் மாநகரில் வெடித்த குண்டுகளுக்கு இந்த அமைப்பு பொறுப்பேற்றுள்ளது (5)
7. ஈழத் தமிழர்கள் விரும்பு உண்ணும் உணவு (3)
8. நாட்காட்டியின் ஆங்கிலச் சொல் (5)

<u>இடமிருந்து வலம்</u>

6. பண்பாட்டின் மறுபெயர் இடம் மாறிக்கிடக்கிறது (5)

<u>மேலிருந்து கீழ்</u>

1. அரச பயங்கரவாதத்தை உலகெங்கும் விதைத்துக் கொண்டிருக்கும் ஒரு வல்லரசு நாடு (5)
2. இலங்கையின் தலைநகரம் (4)
3. இதனை மீட்கவே ஈழத்து தமிழர்கள் போராடிக் கொண்டுள்ளார்கள் (4)
4. பழம் (2)
7. காயம் (2)

<u>கீழிருந்து மேல்</u>

4. புகழ் பெற்ற தமிழ் நடிகர் பெயரின் முதல் பாதி (3)
5. ஆற்றுக்கு இது தேவை (2)

கிடைக்கும் பதில்களில் சரியான விடை எழுதும், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிக்கு
£ 25 பவுண் பரிசாக அனுப்பி வைக்கப்படும்
உங்கள் விடைகளைத் ***தமிழர் தகவல்***
முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# பட்டறிவுப் பகிர்வு

வீடமைப்பு, நிர்மாணக் கைத்தொழில், கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் நீர்பாசன அபிவிருத்தி அமைச்சராக இருப்பவர் பேரியல் அஷ்ரப். தேசிய அமைச்சைக் கைவசம் வைத்திருக்கும் அவரிடம் கிழக்குத் தொடர்பான முக்கிய அமைச்சும் உள்ளது. போதாக்குறைக்கு அவர் தமிழ்ப்பேசும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர். ஆனால், அந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்ற காலத்திலிருந்து தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு ஒரு விடயத்தில் தொடர்ந்து எரிச்சலோ எரிச்சல். விசனமும் கூட. ஏன் தெரியுமா?

தமிழ்ப் பேசும் அந்த அம்மணியின் அமைச்சிலிருந்து தமிழ் பத்திரிகைகளுக்கு வருகின்ற ஊடக அறிக்கைகள், அறிவிப்புகள் எல்லாம் தமிழில் இருப்பதில்லை. ஆகக் குறைந்தது ஆங்கிலத்திலாவது இல்லை. அநேகமாக எல்லாம் சிங்களத்தில்தான் வருகின்றன.

காலங்காலமாகத் தமிழ்பேசி வந்த முஸ்லிம்கள் எல்லாம் தென்னிலங்கையில் சிங்களம் பேசி, சிங்களத்தில் கற்கும் ' சிங்கள முஸ்லிம்களாக ' மாற்றப்படும் ஒரு நடவடிக்கை சத்தம், சந்தடியின்றி அரங்கேறிக் கொண்டிருக்க, முஸ்லிம் பெண்மணி ஒருவர் தலைமையிலான அமைச்சிலும்கூட அதுதான் வெளிப்பட்டுக் கொண்டிருப்பது என்பது வேதனையைத் தருகின்றது.

இந்தப் பின்னணியில் நோக்கும்போது, தென்னிலங்கையில் சிங்களத்தில் முற்றாக ஊறித் திளைத்தவர்களுக்கு தமது அபிவிருத்திப் பணிகளைப் பகிர்வதற்காகக் கிளிநொச்சிக்குப்போவது தாங்கமுடியாத எரிச்சலைத்தரும் என்பதையும் உணரக் கூடியதாகத்தான் உள்ளது.

' தமிழ் எங்கள் மொழி; இஸ்லாம் எங்கள் மார்க்கம்! ' – என்று முழங்கும் முஸ்லிம்களையே கண்டு பேசி, அறிந்து வந்த தமிழருக்குச் சிங்கள சாகரத்தில் இலங்கை இஸ்லாமியர்கள் மூழ்குவது பொறுத்துக் கொள்ள முடியாத அம்சங்கள்.

ஜனாதிபதித் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் எந்த முடிவு எடுத்தாலும் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பு ஆகிய இரண்டில் ஒன்று நீதிமன்றுக்குச் செல்லும் என்பது நிச்சயம்.

அரசமைப்புக்கு வியாக்கியானம் செய்யும் விடயம் என்பதாலும் ஜனாதிபதித் தேர்தல் சமாச்சாரம் என்பதாலும் அத்தகைய விவகாரங்கள் உயர் நீதிமன்றத்தில்தான் விசாரணைக்கு வரும் என்பதும் தெளிவு.

சரி, அப்படி இந்தச் சிக்கல் உயர் நீதிமன்றுக்கு வந்தால் அதனை விசாரிக்கும் நீதியரசர் குழுவில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவும் இருப்பாரா என்ற ஒரு கேள்வி எழுப்பப்படுகின்றது. பிரதம நீதியரசரின் முடிவுகள், தீர்ப்புக்கள், செயற்பாடுகள் என்பன சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள நிலையில் இக்கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

1999 இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஈட்டிய வெற்றியின் அடிப்படையில் – அந்த வெற்றி அறிவிக்கப்பட்டவுடன் தாம் செய்த பதவிப்பிரமாணத்துக்கு மேலதிகமாக – 2000 நவம்பரில் ஒரு பதவிப்பிரமாணம் செய்து, அப்போதுதான் தமது இரண்டாவது பதவிக் காலத்தைத் தாம் ஆரம்பித்தார் என்கிறார் ஜனாதிபதி குமாரதுங்க.

2000 நவம்பரில் ஜனாதிபதி குமாரதுங்க அப்போது பகிரங்கப்படுத்தாமல் இரகசியமாகச் செய்து கொண்ட சத்தியப்பிரமாணமே இப்போது நீதிமன்றத்தில் இந்தச் சிக்கலுக்கு அடிப்படையான விவகாரமாகப் போகிறது. அந்த இரகசிய சத்தியப் பிரமாணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதா, அதைக் கவனத்தில் விடுத்துத்தான் ஜனாதிபதியின் தற்போதைய பதவிக்காலத்தை தீர்மானிக்க வேண்டுமா என்பவை எல்லாம்தான் இப்போது நீதிமன்றத்தில் பிய்த்து உதறப்படப் போகின்றன.

ஆளரவமின்றி நடத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சத்தியப்பிரமாணத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு செய்து வைத்தவரே இப்போதைய பிரதம நீதியரசர் சரத் என். சில்வாதான்

அவர் செய்து வைத்த சத்தியப் பிரமாணம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுதானா என்பதைத் தீர்மானிக்கும் விசாரணை மன்றத்தின் ஒரு நீதியரசராக அவரே இருக்கலாமா? அது நீதியின்பாற்பட்டதா? இயற்கை நீதிக்கு ஒப்பானதா? என்றெல்லாம் கேள்வி எழுப்பப்படும்.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவை எதிராளியாகக் குறிப்பிட்டு அவருக்கு எதிராக முன்னர் வழக்குத் தொடர்ந்தார் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் ஒருவர்.

தாமே பிரதிவாதியாக இருக்கும் அந்த வழக்கை தாமே நீதியரசராகவும் அமர்ந்திருந்து விசாரிக்க முற்பட்ட பிரதம நீதியரசர், அந்த வழக்கில் வழக்காளிக்கே ஓராண்டு சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்து சட்டத்துறையில் புதிய சரித்திரம் படைத்தவர்.

எனவே, தாம் செய்து வைத்த சத்தியப்பிரமாணம் சர்ச்சைக்கு உள்ளாகும்போது அது குறித்து விசாரித்து தீர்ப்பளிக்கும் உரிமை தமக்கு உண்டு எனத் தீர்மானித்து, அதன்படி அவர் செயற்பட்டால் அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. அதை யாராலும் தடுக்க முடியாது என்பதுதான் நமது சட்டத்தின் பின்னடைவாகும்.

–அற்பன்–

சுடர் ஒளி

நன்றி : கொழும்பு



# இலண்டனில் சைவக் கோவில்!

இலண்டனில் பல கோவில்கள் உள்ளன. அவைகளில் எத்தனை, சைவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டவை என்பது ஆராய்வுக்குரியது. விக்கிரகங்களின் எண்ணிக்கை ஒரு கோவிலின் சிறப்பை உயர்த்திவிடுவதில்லை. பல கோவில்கள் சமய ஒழுங்கை மீறியனவாக சொந்த நலன்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. சில கோவில்களின் நிர்வாகங்கள் நிலை குலைந்துள்ளன. அவை அகற்றப்பட்டும் தடைப்படுத்தப் பட்டும் உள்ளன. நல்ல சமூக சேவையை ஆற்றிய சில கோவில்கள் பழிவாங்கப்பட்டுள்ளன. இலண்டன் கோவில்கள் பல அமைப்பு முறையில் ஆலயமாக இல்லை. அவை சில தனிப்பட்ட வியாபார நிறுவனங்கள் போல் அமைக்கப் பட்டுள்ளன. இந்த நிலையில் புதிதாக ஒரு சிவன் கோவில் இல : 313, மேற்றன் றோட், விம்பில்டனில் திரு. மணிவண்ணனால் ஆரம்பிக்கப் பட்டுள்ளதை அவதானித்தேன்.

இந்தக் கோவிலின் அமைப்புமுறை மற்றைய கோவில்களை விட வேறுபட்டுள்ளது. அத்துடன் மூல விக்கிரகங்கள் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. ஒரு சிவன் கோவில் எப்படி அமைக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இக்கோவில் ஒரு உதாரணம். எத்தனையோ இடர்ப்பாடுகட்கும் மத்தியில் இக்கோவிலை உருவாக்கியுள்ள மணிவண்ணனையும், அவரது இறை பக்தியையும், சிவவழிபாட்டில் அவர் காட்டும் அக்கறையையும் பாராட்டுகிறோம். சைவ அன்பர்கள் ஒருமுறையாவது அக்கோவிலைத் தரிசியுங்கள்

– ஒரு சைவ அன்பன்
விம்பிள்டன்

✣✣✣

முருகன் பத்மநாபன்
12ம் வட்டாரம் புங்குடு தீவு

உருக்கமான வேண்டுகோள்

## மகனின் சத்திர சிகிச்சைக்கு நிதி உதவி கோரல்

முருகன் பத்மநாபன் ஆகிய எனக்கு வயது 46 அத்துடன் ஆறு (6) பிள்ளைகளின் தந்தையாக உள்ளேன். எனது நாளாந்த கூலி வேலையினால் குடும்ப வாழ்க்கை நடாத்தி வருகின்றேன். கஷ்டமான இவ்வேளையில் எனது மகன் பத்மநாபன் மோகனதாஸ் வயது 11 என்பவருக்கு இருதயத்தில் வால்வு மாற்றும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் கூடிய விரைவில் சத்திர சிகிச்சை செய்தால்தான் அவர் நீண்ட நாட்கள் உயிருடன் வாழமுடியும் அல்லது மரணத்தை தழுவவேண்டி ஏற்படும் என டாக்டர்கள் கூறியமையால் யாழ்ப்பாணம் வைத்தியசாலை, பின்னர் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று காட்டியமையால் எனக்கு பெருமளவு செலவு ஏற்பட்டுள்ளது. இனிமேலும் என்னால் இதற்கு ஏற்படும் செலவுகளை சமாளிக்க முடியாது இருப்பதினால் மனித நேயம் மிக்க எனது மண்ணின் மாந்தர்களையும், சேவை நோக்கமுடைய எனது கிராம மக்களையும் இக்கடிதமூலம் உதவி கோருகின்றேன். நீங்கள் ஒவ்வொருவரும் தருகின்ற உதவிகள் அனைத்தும் சிறுதுளிகளாக இருந்தாலும் அவை ஒன்று சேர்ந்து ஒரு பெரிய உதவியாக மாறினால் அதன் மூலம் எனது மகனின் உயிரைக் காப்பதுடன் எனது வாழ்வையும் வளமாக மாற்றமுடியும் என நம்புகிறேன்.

இந்த சத்திர சிகிச்சைக்குத் தேவையான நிதி உதவி சம்பந்தமான செலவு விபரத்தை கடிதம் வழங்கிய டாக்டர் விபரத்திலிருந்து அறிந்து கொள்ளமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணக்கு இல : 02-9281601-4
வங்கி : ஹட்டன் நெஷனல் வங்கி ( **Jaffna** )
பணம் பெறுபவர் : செல்வி க. ராசலா – ( பத்பநாதன் ராசலா )

**பொது அறிவு ஜனன ஜாதகம் எண் சோதிடம் சமயம் இதைப் பற்றிய வாசகர்களின் எந்தக் கேள்வியானாலும் தகுதியானவரிடம் இருந்து பதில் அளிக்கப்படும்**



மாய மந்திரப் படங்களை எடுத்த விட்டலாச்சாரியா ஒரு விதத்தில் நேர்மையானவர். அவர் தன் கட்டுக்கதைகளுக்கு அறிவியல் சாயம் எதையும் பூசவில்லை. மனித நேயத்தில் உருகிப்போகும் மாமனிதனாக தன் கதாநாயகனைக் காட்டிவிட்டுப் பின் மற்றவர்களைக் கொல்வதற்குப் பேய், பிசாசுகளை அவன் வருவிப்பதாக் கூறவில்லை.


அவர் படங்கள் வெறும் பொழுது போக்காக மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் ஷங்கர் – சுஜாதா கூட்டணியினர், அறிவியல் அம்புலிமாமாக்கள். சின்னத் சின்னத் தவறுகளுக்குக் கூட மரண தண்டனையை விதம் விதமாய்க், கொடூரமாய்ப் பரிந்துரைக்கும் கொலை வெறியர்கள். அதிலும் சாதிக்கொரு நீதி சொல்லும் மனுநீதியின் மறு அவதாரங்கள்.

தமிழர்களுக்கும், சமூக நீதிக்கும் மனித நேயத்திற்கும் அந்நியமாக இப்போது ஒரு திரைப்படம் வெளிவந்துள்ளது. அதன் பெயர் அந்நியன்.

'அநீதி கண்டு பொறுக்காத' இராமானுஜம் அய்யங்கார், அவருக்கே தெரியாமல், அவர் உடம்பிலிருந்து அந்நியனாக வெளிப்பட்டு, கருட புராணத்தில் சமஸ்கிருத சுலோகங்களைப் பின்பற்றி, விதவிதமான கொடூரக் கொலைகளைச் செய்து முடிக்க, அதனைப் ' பன்முக ஆளுமைச் சீர்குலைவு ' (Multiple Personality disorder)என்று எடுத்துக்கொண்டு, மருத்துவச் சிகிச்சைக்கு ஆணையிடுகின்றது நீதிமன்றம். எந்தத் தண்டனையும் இல்லாமல், இரண்டு ஆண்டுகள் சிகிச்சை பெற்று வெளியில் வரும் அந்த அய்யங்கார் மீண்டும் ஒரு கொலையை செய்வதோடு படம் முடிவடைகிறது.

# அந்நியன் ஒரு கலாச்சார அரசியல்

–சுப வீரபாண்டியன்



இராமானுஜ அய்யங்கார் கண்டுபிடித்த சில அநீதிகளையும், அதற்கு அவருக்குள் இருக்கும் ' கணிப்பொறி அந்நியன் ' வழங்கிய தண்டனைகளையும், படம் பார்க்காதவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

1. சாலையில் அடிபட்டுக் கிடக்கும் ஒருவனை அந்த வழியாகப் புத்தம் புதுக் காரில் செல்லும் ஒருவர், மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்ல மறுத்ததற்காக, நூற்றுக்கணக்கான எருமை மாடுகளை விட்டு மிதித்து, முட்டி, மோதிக் கிழித்து எறியப்படுகிறார். பிறகு அவருடைய இரத்தம் அந்தப் புதுக் காரில் பூசப்படுகிறது.
2. தொடர்வண்டி உணவகங்களுக்காக உணவு சமைக்கும், கான்ட்ராக்டர் சொக்கலிங்கம் தயாரித்துக் கொடுத்த உணவில், அரிசி சரியாக வேகவில்லை. சோறு, காய்கறிகளின் அளவும் சற்றுக் குறைவாக உள்ளது. இதற்காக அவரது உடம்பு முழுவதிலும் ' மசாலா ' தடவி அவரை எண்ணெய் கொப்பறைக்குள் போட்டுப் பொரித்து எடுக்கிறார் அந்நியன். ' சிக்கன் 65 'க்குப் பதிலாக ' சொக்கன் 65' என்று வசனம் எழுதுகிறார் சுஜாதா.
3. தன் வண்டியின் ' பிரேக் கம்பி ' அறுந்துவிட்டதற்காக, அந்தக் கம்பி தயாரித்த நிறுவனத்தின், உரிமையாளரைக் கண்டுபிடித்து, அவரை முக்கால் நிர்வாணமாக்கிக் கட்டி வைத்து, அவர் உடம்பு முழுவதும் கொடிய அட்டைகளை ஊறவிட்டுச் சித்திரவதைப்படுத்திக் கொன்று நீதியை நிலைநாட்டுகிறார் அந்நியன்.
4. வேலை எதுவும் செய்யாமல், குடித்துவிட்டு பூங்காவில் படுத்து உறங்கும் ஒருவனை எழுப்பி, அவன் இந்த உலகத்திற்குத் தேவையற்றவன் என்று உடனடியாக முடிவெடுத்து, அவனைப் பாம்புகள் நிறைந்திருக்கும் கூண்டிற்குள் தள்ளி, அவன் செத்து மடிவதைக் கண்டு இன்புறுகிறார் அந்நியன்.

தான் செய்த கொலைகளை எல்லாம் வீடியோ படம் எடுத்து, ஒரு பெரிய அரங்கிற்கு மக்களை எல்லாம், சுவரொட்டிகள் அடித்து விளம்பரப் படுத்தி வரவழைத்து, அப்படத்தைப் போட்டுக் காட்டுகிறார் அந்நியன். பொது மக்கள் கைதட்டி வரவேற்கின்றனர். ஆனால் ஆயிரக்கணக்கில், துப்பாக்கிகளோடு கூடியிருக்கும் காவல்துறையினரால் அந்த அய்யங்காரைப் பிடிக்க முடியவில்லை.

ஒருவேளை பார்ப்பனர்கள் விரும்பும் ராமராஜ்யம் இப்படித்தான் இருக்கும் போலிருக்கிறது. தவம் செய்த ஒரே குற்றத்திற்காகச் சம்பூகனை வெட்டியெறிந்த ராமர்தானே இந்த அய்யங்காருக்கும் கடவுள்.

ஒரு காட்சியில், அந்நியனாக வந்திருக்கும் இராமானுஜ அய்யங்காரைப் பார்த்துப் பத்திரிகையாளர்கள் சில கேள்விகள் கேட்கின்றனர்.

'குற்றங்களில் சிறியவை, பெரியவை என்று பாராமல் எல்லாவற்றிக்கும் மரண தண்டனை வழங்குவது நியாயமா?' என்று கேட்கின்றனர்.

'' குற்றங்களிலே Small, Large எல்லாம் கிடையாது. எல்லாம் Extra Large '' தான் என்கிறார் அந்நியன்

'' சட்டத்த இப்படி நீங்க கையில எடுத்துக்கலாமா? '' என்று நிருபர்கள் கேட்க, '' நீங்க சட்டத்த மீறலாம், நான் கையில் எடுத்துக்கக் கூடாதா? '' என்று திருப்பிக் கேட்கிறார். உடனே பொதுமக்கள் எல்லோரும் கைதட்டி, ஆரவாரித்து அந்நியனைப் பாராட்டுகின்றனர்.



என்ன அபத்தம் இது?

குற்றங்களில் சிறியது, பெரியதே கிடையாதா? எல்லாம் ஒன்றுதானா.

இரவு நேரம் மிதி வண்டியில் விளக்கில்லாமல் செல்வதும், ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, அவளைச் சித்திரவதை செய்து, கொன்று போடுவதும் ஒரே மாதிரியான குற்றங்கள்தாமா? இரண்டுக்கும் ஒரே தண்டனையா?

சரி, இவ்வளவு நியாயம் பேசும், இந்தத் திரைப்பட இயக்குநர் ஷங்கர், தயாரிப்பாளர் ரவிச்சந்திரன், வசனகர்த்தா சுஜாதா, கதாநாயகன் விக்ரம் உள்ளிட்ட அனைத்து ' மகா மகா உத்தமர்களிடமும் ' நாம் சில வினாக்களை எழுப்ப வேண்டியுள்ளது.

உங்களில் யாரும் இதுவரை எந்தக் குற்றமும் செய்ததே இல்லையா? ' கறுப்புப் பணம் ' என்னும் சொல்லையே இதுவரை நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? உங்களின் ஒவ்வொரு காசும், உங்கள் வியர்வையால் சம்பாதிக்கப்பட்ட வெள்ளைப் பணம்தானா? உங்கள் மனைவியைத் தவிர வேறு எந்த ஒரு பெண்ணையும் நீங்கள் தொட்டதுகூட கிடையாதா?

அடேயப்பா... அவ்வளவு உத்தமர்களாக இருந்தால் உங்களை நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் உங்கள் மனசாட்சியைக் கேட்டுப் பாருங்கள். எத்தனைத் தவறுகள், குற்றங்களை நீங்கள் தெரிந்தே செய்திருக்கிறீர்கள் என்று.

இப்போது கருட புராணச் சமஸ்கிருதச் சுலோகங்களின்படி உங்களுக்கு என்ன தண்டனை? எருமை மாடுகளா, எண்ணெய்க் கொப்பறையா, இரத்தம் உறிஞ்சும் அட்டைகளா, கொடும் நஞ்சு கொண்ட பாம்புகளா... சொல்லுங்கள் அனுப்பி வைக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மரண தண்டனை என்பது நீதியின் நெறிமுறை அன்று, காட்டுமிராண்டித்தனத்தின் கண்சிமிட்டல்.

கொலைக் குற்றத்திற்கே மரண தண்டனை கூடாது என்று, உலகின் பல நாடுகள் முடிவெடுத்துள்ளன. நாகரிகமான நாடுகளிலிருந்தெல்லாம் மரண தண்டனை விடைபெற்றுச் சென்று விட்டது.

இந்த கால கட்டத்தில், கருட புராணத்தைக் கணிப்பொறியில் ஏற்றி, '' கொலை - ரூபாய்க்கு நாலு '' என்று விற்பனை செய்ய வந்துள்ளது ஒரு அற்பக் கூட்டம். கொலையில், ரத்தத்தில் கூடி மகிழ்கின்றனர் கூத்தாடும் கொலை வெறியர்கள்.

தணிக்கைக் குழுவே தடை செய்திருக்க வேண்டிய படம் இது.

படம் பார்த்துவிட்டு வெளியே வருகின்றவனின் மனநிலை என்னவாக இருக்கும். அதிலும் கொடிய மதியுடையோர், குற்றப் பின்னணியுடையோர் நெஞ்சுகளில் எந்த எண்ணம் நிழலாடும்.

'கலை, இலக்கியம் யாவும் மக்களுக்காகவே, என்றார் மாசேவா.' மக்களிடையே சமூகப் பொறுப்பை, சமூக அக்கறையை ஏற்படுத்தவும், மனித உறவுகளை மேம்படுத்தவும், அன்பு, பாசம் போன்ற உணர்வுகளை ஆழப்படுத்தவும் வேண்டிய திரைப்படங்கள், வக்கிரங்களை வகைப்படுத்தவும், வெறியை வெளிப்படுத்தவும், கொடூரச் செயல்களைத் தலையில் வைத்துக் கூத்தாடவும் வழி விடுவதா?

உயர் தொழில் நுட்பம், அறிவியல் மேம்பாடு அனைத்தையும் பயன்படுத்திப் பயங்கரவாதத்தை அல்லவாஇந்தப் படம் வளர்க்கிறது.

இந்த கொடுமைக்கிடையில், இன்னொரு நுட்பமான பண்பாட்டு அரசியலையும் இப்படம் முன்வைக்கிறது. பொதுமக்கள் பலருக்குப் புரியாத இந்த மோசடியை 'ஈரோட்டுக் கண்ணாடி' மட்டும்தான் எடுத்து விளக்கும்.

திரைப்படத்தில், அநீதி கண்டு பொங்கியெழும் இராமானுஜம் ஒரு அய்யங்கார். தலையில் குடுமியோடும்,

மார்பில் பூணூலோடும் உலாவரும் அவர், நடை, உடை, பாவனை, மொழி அனைத்திலும் தன் சாதியை வெளிப்படுத்தத் தவறுவதில்லை.

' அநீதி புரியும் அரக்கர்கள் ' அனைவரும் பார்ப்பனரல்லாதவர்கள் என்பதை அவர்களின் பெயர், தோற்றம், மொழி ஆகியவைகளின் மூலம் இயக்குநர் நமக்குப் புரிய வைக்கின்றார். சங்கீத சபா செயலாளரும், கதாநாயகியும்தான் படத்தில் தவறு செய்யும் இரண்டு பார்ப்பனர்கள். ஆனால் அவர்கள் இருவருக்கும் மரண தண்டனை வழங்கப்படவில்லை.

கதாநாயகியைக் கொல்ல அந்நியன் முயல்கிறான். ஆனால் அதற்குள் அவனுக்குள் இருக்கும் அய்யங்காரும், ரெமோ என்னும் இன்னொரு மனிதனும் அதனைத் தடுத்து நிறுத்தி விடுகின்றனர். அதே போல, பரிந்துரைகளின் அடிப்படையில் வாய்ப்பு வழங்கும் சங்கீத சபா செயலாளரும் கொலை செய்யப்படுவது போல மிரட்டப்படுகிறாரே தவிர கொலை செய்யப்பட்டதாய்ப் படத்தில் எந்தப் பதிவும் இல்லை.

இங்கேதான் மனுநீதி மறுபடியும் உயிர்த்தெழுகிறது. தண்டனை, குற்றத்தின் அடிப்படையில் அன்று, சாதியின் அடிப்படையில்தான் என்பது தெளிவாகின்றது.

இப்படத்தின் இயக்குநர் ஷங்கரின் இன்னொரு திரைப்படமான ' ஜென்டில்மேனிலும் ' இப்படித்தான் பார்ப்பனியம் பல்லிளித்தது. இப்போது மறுபடியும் இப்படி ஒரு பச்சைப் பார்ப்பனப் படத்தை அவர் தந்திருக்கிறார்.

பார்ப்பனரல்லாத ஷங்கர் போன்றவர்களின் பார்ப்பன அடிவருடித்தனத்திற்கும், அடிமைத்தனத்திற்கும் என்ன பின்னணி?

தில்லியுலுள்ள ஆர்.எஸ்.எஸ் நிதி நிறுவனங்களிலிருந்தும், கொலைவழக்குச் சங்கர மடத்திலிருந்தும், ' பினாமி 'யாக வந்து குவியக்கூடிய பணமாக இருக்குமோ என்று செய்தியறிந்த சிலர் சந்தேகப்படுகின்றனர்.

எதுவாயிருப்பினும், சமூகத்தைச் சீரழிக்கும் சண்டாளர்களுக்கு, வரலாறு தன் வழியில் பாடம் கற்பித்தே தீரும்.

***

## அறிவிப்பு

சுப. வீரபாண்டியன் அவர்கள் எழுதும் குறுகத் தரித்தக் குறள் அடுத்த இதழில் இடம்பெறும்





**தமிழர் விளையாட்டு விழா நிறுத்தப்பட்டுள்ளது**

லண்டன் மாநகரில் நிகழ்ந்துவரும் தாக்குதல் சம்பவங்கள் காரணமாகவும் தமிழ் இளைஞர் குழுக்களின் அதிகரித்துவரும் வன்முறைக் குற்றச்செயல்கள் காரணமாகவும் இவ்வருட தமிழர் விளையாட்டுவிழா காவல்துறையினரால் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

# Chellappa & Co. Ltd.

***LEGAL CONSULTANCY, ACCOUNTANCY & TAX SERVICES***

**Legal :** We have expertise with many years experience in providing excellent advise and assistance in respect of all legal matters including civil litigation.

பல வருட அனுபவமும் திறமையும் உள்ள சட்ட ஆலோசகர்களினால் சகலவிதமான சட்டத் தேவைகளுக்குமான ஆலோசனைகளை வழங்குவதுடன், அதற்கான உதவிகளையும் உங்கள் திருப்திகேற்ப சட்ட வரையறைக்குட்பட்டு மிகச் சிறந்த முறையில், குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து தரவுள்ளோம். எனவே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**Accountancy :** We offer a fast, friendly and reliable accounting service for small and meidum sized businesses including preparation of VAT, TAX returns and Annual Accounts.

நீண்டகால அனுபவமும் தொழில் நுட்பமும் தெரிந்த கணக்காளர்களும், கணக்குப் பதிவாளர்களும், உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின் கணக்கியல் சேவைகளை மிகத் துரிதமாகவும் நேர்த்தியாகவும் செய்து தருவதற்கு உடனே எங்களை நாடுங்கள்.

*Special allowance will be given for start-up business. contact us for friendly advice*

**Mr K Chelva-Nayagam LLB**
Manager
**Mob : 07956 466 708**
265 Haydons Road Wimbledon London SW19 8TY
Tel : 020 8542 7111 Fax : 020 8542 9770
Email: chellappa@tiscali.co.uk

# ஆவணி மாதப்பலன் ( ஜூலை 13 – ஆகஸ்ட் 13 )

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115


**மேடம் :** ( அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம் )



உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். குழப்பம் தீரும். பல முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புது நண்பர்கள் அறிமுகமாவார்கள். கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான வாக்குவாதங்கள் வந்து போகும். கோபம் குறையும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். மனைவிக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். மனைவி வழி உறவில் கருத்து வேறுபாடு வெடிக்கும். வாகன விபத்து வரக்கூடும். குழுந்தை பாக்யம் உண்டாகும். பிள்ளைகளால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டாரத்தில் நிதானம் தேவை. உத்யோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது. சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். கலைஞர்களுக்கு சிக்கல் ஏற்படும். கன்னிப் பெண்களுக்கு காதல் கசந்து போகும். சுமாரான மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : ஆவணி மாதம் 24ந்தேதி மதியம் 2 மணி முதல் 25, 26 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : 1,9 |
| இராசியான நிறங்கள் | : மெரூன், ஊதா |

**இடபம் :** ( கிருத்திகை 2, 3, 4ம் பாதம்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள் )



உங்களின் நீண்டகால ஆசைகள் நிறைவேறும். உடல்நலம் சீராகும். லேசாக தலைசுற்றல், தூக்கமின்மை வந்து போகும். பண வரவு அதிகரிக்கும். பூர்வீகச் சொத்தில் இருந்து வந்த வில்லங்கம் விலகும். சொத்து சேரும். வழக்குகளெல்லாம் சாதகமாக முடியும். தாயின் உடல்நலம் சீராகும். அரசால் இருந்து வந்த ஆபத்துகள் நீங்கும். கல்யாணம் நடக்கும். குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு பாக்யம் உடனே கிடைக்கும். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள். புதுவீடு, மனை வாங்கி உடனே குடியேறுவீர்கள். உத்யோகத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். புது வாய்ப்புகளும் வரும். வியாபாரத்தில் புது சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். பழைய கடன் தீரும். திடீர்ப்பயணங்களால் ஆதாயம் உண்டு. எதையும் சாதிக்கும். மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : ஆவணி மாதம் 1, 27, 28 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : 1,3 |
| இராசியான நிறங்கள் | : மஞ்சள், கிரே |

**மிதுனம் :** ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)



எதையும் அனுபவப்பூர்வமாகப் பேசுவீர்கள். கடந்த காலங்களில் நடந்த தவறுகள் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்வீர்கள். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். கணவன், மனைவிக்குள் கசப்புணர்வுகள் தீரும். பழைய உறவினர்களின் நட்பு மீண்டும் கிடைக்கும். பிள்ளைகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். நவீன எலக்ட்ரானிக்ஸ், மின் சாதனங்கள் வாங்குவீர்கள். சகோதரர் உதவுவார். சளித்தொல்லை, வாயுத் தொந்தரவு வந்து போகும். பேச்சில் நிதானம் தேவை. பழைய கடன் பிரச்சனையை தீர்க்க புதிய வழி பிறக்கும். உறவினரின் திருமணத்திற்கு முழுதாக செலவு செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கை யாளர்களை கவர்ந்திழுப்பீர்கள். புது பங்குதாரர்களால் ஆதாயம் உண்டு. உத்யோகத்தில் நிலவிய பனிப்போர் நீங்கும். உயரதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். புதிதாக வாகனம் வாங்குவீர்கள். தடைகள் உடையும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : ஆவணி மாதம் 23, 29, 30 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : 5, 6 |
| இராசியான நிறங்கள் | : சில்வர் கிரே, ரோஸ் |

**கடகம் :** ( புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம் )



அவசரப்பட்டு பேசி பிறரிடம் பெயரைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். உங்களின் திட்டங்களில் மிக முக்கியமான ஒன்று இப்போது நிறைவேறும். பயணங்களால் வெற்றி உண்டு. சகோதரி உதவுவார். சொத்து சேரும். பணத்தட்டுப்பாடு நீங்கும். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். மனப்புழுக்கம் நீங்கும். கணவன், மனைவி உறவு சுமார்தான். வீண் விவாதங்கள் தவிர்ப்பது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். புது உத்யோக வாய்ப்புகள் தேடி வரும். பூர்வீகச் சொத்தில் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். அரை, குறையாக நின்ற வேலைகள் முழுமையடையும். ஏமாற்றங்கள் விலகும் மாதமிது.

| | |
|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : ஆவணி மாதம் 4, 5 மற்றும் 31ந்தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : 6,9 |
| இராசியான நிறங்கள் | : ரோஸ், வெள்ளை |

**சிம்மம்** : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



உங்களை ஏமாளி என்று நினைத்த சிலருக்கு நல்ல பாடம் புகட்டுவீர்கள். நிர்வாகத் திறமையும், ஆளுமைத் திறமையும் அதிகரிக்கும். எதிரிகளை வெல்வீர்கள். வழக்குகளெல்லாம் சாதகமாக முடியும். கணவன் மனைவி உறவு இனிக்கும். குழந்தை பாக்யம் உண்டாகும். குல தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். கனவுத் தொல்லை, தூக்கமின்மை வந்து போகும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் தெரியும். ஆடை, அணிகலன்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் விவாதங்கள் நீங்கும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பாக்கித் தொகைகள் வசூலாகும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் மேலதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். சம்பள பாக்கி கைக்கு வரும். பதவி உயர்வுக்கு உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும். சகோதரர் உதவுவார். சொத்து சேரும். குழப்பம் நீங்கி மகிழ்ச்சி பெருகும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | ஆவணி மாதம் 6, 7 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 3, 7 |
| இராசியான நிறங்கள் | : | ப்ரௌன், ஊதா |

**கன்னி** : ( உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள் )



திடீர்ப்பயணங்கள் அதிகரிக்கும். விரையச் செலவுகளும் அதிகமாகும். பணம் எதிர்பார்த்த வகைகளில் கைக்கு வரும். கொஞ்சம் உறவினர்களால் ஏமாற்றம் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் வந்து போகும். அரசால் அனுகூலம் உண்டாகும். தந்தை வழி உறவினர்கள் உதவுவார்கள். சகோதரரால் அலைச்சலும், நட்டமும் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். விலையுயர்ந்த பொருட்களைக் கவனமாகக் கையாள்வது நல்லது. கணவன் மனைவிக்குள் வாக்குவாதம் வந்து போகும். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகள் அதிகரிக்கும். வேலையாட்களை அனுசரித்துப் போவது நல்லது. தூங்கிக் கிடந்த சரக்குகள் விற்கும். உத்யோகத்தில் உயரதிகாரிகள் உங்களைத் தாமதமாகப் புரிந்து கொள்வார்கள். சக ஊழியர்களிடம் வாக்குவாதம் வந்து போகும். வழக்குகளில் வெற்றி உண்டு. சற்றே நிதானம் தேவைப்படும்.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | ஆவணி மாதம் 8, 9 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 5, 8 |
| இராசியான நிறங்கள் | : | கிரே, நீலம் |

**துலாம்** : ( சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள் )



சிறு சிறு தடைகள் வந்தாலும் உங்களின் கடின உழைப்பால் எளிதில் வெற்றி பெறுவீர்கள். புது நண்பர்களால் ஆதாயம் உண்டு. பழைய உறவினர்களால் வீண் விரையம் ஏற்படும். விலையுயர்ந்த பொருட்களைக் கவனமாகக் கையாளுங்கள். அரசால் அனுகூலம் உண்டு. சகோதரி உதவுவார். புண்ணிய ஷேத்திரங்கள் சென்று வருவீர்கள். கணவன் மனைவி உறவு வலுவடையும். பிள்ளைகள் திருந்துவார்கள். அக்கம் பக்கம் வீட்டாருடன் இருந்த மோதல் போக்கு மறையும். ஷேர், லாட்டரி பணம் தரும். பழைய கடனைப் பைசல் செய்ய சில வழிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது திட்டங்கள் தீட்டுவீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள். நல்ல வேலையும் கிடைக்கும். சில எண்ணங்கள் நிறைவேறும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | ஆவணி மாதம் 10, 11, 12ந்தேதி நண்பகல் வரை கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 4, 6 |
| இராசியான நிறங்கள் | : | அடர் நீலம், வெளிர்ப் பச்சை |

**விருச்சிகம்** : ( விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை )



நீங்கள் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். பழைய கடனைப் பைசல் செய்வீர்கள். புது அணிகலன்கள், விலையுயர்ந்த எலக்ட்ரானிக், மின் சாதனங்கள் வாங்குவீர்கள். உங்களின் நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். அரசால் அனுகூலம் உண்டு. பணம் பல வழிகளில் வரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். குடும்பத்துடன் சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். வி.ஐ.பிக்கள் அறிமுகமாவார்கள். எதிர்ப்பு குறையும். வழக்கு சாதகமாகும். வெளி வட்டாரம் இனிக்கும். கல்வியாளர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் இலாபம் ரெட்டிப்பாகும். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். புது ஒப்பந்தங்களும் தேடி வரும். அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்துவீர்கள். உத்யோகத்தில் உயரதிகாரிகளின் அன்பையும், பாராட்டையும் பெறுவீர்கள். சம்பளம் கூடும். எதையும் எளிதாக சாதிக்கும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | ஆவணி மாதம் 12ந்தேதி நண்பகல் முதல் 13, 14 தேதிகளில் கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 3,9 |
| இராசியான நிறங்கள் | : | ஆரஞ்சு, ஊதா |

**தனுசு** : ( மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



கொஞ்சம் அலைச்சல் இருந்தாலும் சில காரியங்கள் நிறைவேறும். பணவரவு உண்டு. ஆனால் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. மகான்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். வாகன விபத்து வந்து போகும். சகோதரர் உதவுவார். பிள்ளை பாக்யம் கிடைக்கும். அரசு விவகாரங்களில் கவனம் தேவை. வீண் விவாதங்களை வெளிவட்டாரத்தில் தவிர்ப்பது நல்லது. யாருக்காகவும் ஜாமீன், காரெண்டர் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் மந்த நிலை மாறும். போட்டிகளை சமாளித்து லாபம் சம்பாதிப்பீர்கள். கூட்டுத் தொழிலில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். உத்யோகத்தில் அனைவரையும் அனுசரித்துப் போவது நல்லது. மாதப் பிற்பகுதியில் வேலைப்பளு குறையும். சுபகாரியப் பேச்சு வார்த்தை சுபமாக முடியும். வளைந்து நிமிரும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | ஆவணி மாதம் 15, 16, 17ந்தேதி காலை 10.30 மணி வரை கவனம் தேவை |
| இராசியான எண்கள் | : | 1,9 |
| இராசியான நிறங்கள் | : | ஆரஞ்சு, வெள்ளை |

**மகரம்** : ( உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள் )



அவசர முடிவுகள் வேண்டாம். பிறர் உங்களைப் பற்றி கடுமையாக விமர்சித்தாலும் கண்டு கொள்ளாதீர்கள். பணம் வரும். சேமிக்க முடியாது. உறவினர்கள், நண்பர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். பேச்சில் நிதானம் தேவை. அக்கம், பக்கம் வீட்டாருடன் கவனமாகப் பழகுங்கள். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். மாதப் பிற்பகுதியில் பொன், பொருள் சேரும். யாருக்கும் பணம் வாங்கித் தரவேண்டாம். எதிரிகள் அடங்குவார்கள். சொந்த ஊரில் செல்வாக்கு கூடும். தலைசுற்றல், மூட்டு வலி வந்துபோகும். வியாபாரத்தில் அதிக முதலீடுகள் வேண்டாம். பற்று வரவு சுமார்தான். உத்யோகத்தில் உங்களின் திட்டங்கள் நிறைவேறும். அதிகாரி உதவுவார். சகோதரரின் திருமணம் சிறப்பாக முடியும். லாட்டரி பணம் தரும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். பழைய நண்பர்கள் உதவுவார்கள். ராஜதந்திரத்தால் வெல்லும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : ஆவணி மாதம் 17ந்தேதி காலை 10.30 மணி முதல் 18, 19 தேதிகளில் கவனம் தேவை

இராசியான எண்கள் : 3, 8

இராசியான நிறங்கள் : மஞ்சள், நீலம்

**கும்பம்** : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)



நீங்கள் யதார்த்தமாகப் பேசுவதை சிலர் தவறாக நினைப்பார்கள். பேச்சில் நிதானம் தேவை. இளைய சகோதரர் உதவுவார். பணவரவு எதிர்பார்த்தபடி அமைந்தாலும் அதிக செலவினங்களால் பணப்பற்றாக்குறை வரக்கூடும். காய்ச்சல், தலைவலி வந்து போகும். கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடியும். லாட்டரி இலாபம் தரும். ஆடை, அணிகலன்கள் சேரும். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். உத்யோகத்தில் வாக்குவாதங்கள் வந்துபோகும். அதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பிரச்சனைகள் தலைதூக்கும். கூட்டுத் தொழில்களில் குழப்பங்கள் வந்துபோகும். மாத இறுதியில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். முற்பகுதி கசந்து பிற்பகுதி ஏற்றம் தரும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : ஆவணி மாதம் 20, 21 தேதிகளில் கவனம் தேவை

இராசியான எண்கள் : 4,9

இராசியான நிறங்கள் : அடர் நீலம், பிங்க்

**மீனம்** : ( பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி,ரேவதி )



உங்களின் நீண்டகாலத் திட்டமெல்லாம் இப்போது நிறைவேறும். கணவன்–மனைவிக்குள் நிலவி வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். எதிரிகளை வீழ்த்துவீர்கள். வழக்குகள் சாதகமாகும். எதிர்பார்த்தபடி திருமணம் முடியும். ஆடை அணிகலன்கள் சேரும். அரசால் ஆதாயம் உண்டு. புது வியாபாரம் தொடங்குவீர்கள். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். லாட்டரி மூலம் பணம் வரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். கோபம் குறையும். உத்யோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு. புது வேலை கிடைக்கும். சொந்த ஊரில் செல்வாக்கடைவீர்கள். பழைய கடன் தீரும். வெற்றிகள் குவியும் மாதமிது.

சந்திராட்டம தினங்கள் : ஆவணி மாதம் 22, 23, 24ந்தேதிகளில் கவனம் தேவை

இராசியான எண்கள் : 1,6

இராசியான நிறங்கள் : ரோஸ், வெள்ளை


*ஸ்ரீமதி யோகா தில்லைநாதன் 8வது ஆண்டாக மேடையேற்றும்*

## இளைய கானக்குயில் 2005

22.10.2005 சனி மாலை 6 மணிக்கு

Greenford Assembly Hall, Ruislip Road, Greenford, Middlesex

( Oppositt Mansel Road, Greenford )

6-12 வயதிற்குட்பட்டவர்கள் பால கானக்குயில் போட்டி நிகழ்ச்சியிலும் 12-18 வயதிற்குட்பட்டவர்கள் இளைய கானக்குயில் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளலாம். ஒரு Audio Cassette இல் சினிமா பாடலை பாடி (இசையின்றி) உங்கள் பெயர், வயது, விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றோடு Kanakuyil, P.O.Box 318, New Malden, KT3 3WT என்ற விலாசத்திற்கு August 6, 13, 20 ம் திகதி சனிக்கிழமை அல்லது August 7, 14 ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 7.15க்கும் 7.50க்கும் இடையில் கானக்குயில் ஒலிபரப்பில் 0207 501 1544 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு வானொலியில் பாடலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

ஸ்ரீமதி யோகா தில்லைநாதன்


07956 133 528, 020 8390 5823

லொம்பிற்கில் தமிழ் மக்களுக்கேற்ற **Shopping Centre**












# SIVAYOGAM

(A Charity Registered in England & Wales- Reg. No 1050398)
180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337
Email: info@sivayogam.plus.com Web: www.sivayogam.co.uk



## ஐந்தாவது ஆண்டு மாபெரும் தேர் திருவிழா
## 29.08.2005 திங்கட்கிழமை (வங்கி விடுமுறை)



எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன், 29.08.2005 திங்கட்கிழமை வங்கி விடுமுறை தினத்தில் டூட்டிங், மிச்சம், பிரதான வீதிகள் ஊடாக 21 அடி உயர, தங்க கலசம் கொண்ட, அழகிய சித்திரத் தேரில் எழுந்தருளி, பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கச் சித்தம் கொண்டுள்ளாள்.


கொழும்பில் 'ஆடிவேல்' விழாவைப் போல் இது அமையும். மைதானத்தில் கரகம், காவடி, நடனங்கள், சொற்பொழிவு, கர்நாடக இசைக் கச்சேரி, நாதஸ்வரக்கச்சேரி, கலை நிகழ்ச்சிகள் போன்றவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.


பக்தப் பெருமக்கள் அனைவரும் இத்தேர்த் திருவிழா பவனியில் கலந்துகொண்டு, அம்பாள் திருத்தொண்டில் ஈடுபட்டு, எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனின் பேரருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்


## Arulmihu London Muththumari Amman Temple
# Fifth Annual Chariot Festival


**On 29.08.05 Bank Holiday Monday, at FIGGS MARSH - Mitcham**

***The Chariot procession will leave the Temple at 9.a.m, pass through Upper Tooting Rd., Tooting High St., Mitcham Rd. and London Rd. Religions discourses, Music, Dance, Drama etc will take palce on an open stage in the Park.***


WEST CROYDON-ல்
Best Food
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள்,
பழவகைகள், கடல் உணவு வகைகள் இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்.
259-261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269 Fax : 020 8686 4577


HARROW-வில்
Best Food
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள், பழ வகைகள், கடல் உணவு வகைகள் இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்.
' சுகி சிவம் ' அவர்களின்
அனைத்துப் புத்தகங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.
ரமணி சந்திரனின் புத்தகங்கள் யாவும்
2 பவுண் மட்டுமே
249 Northolt Road Harrow
Middlesex HA2 8HR Tel : 020 8423 9933


லூசியத்தில் மக்களின் நீண்டநாள்
ஆசை நிறைவேறுகிறது
நம்மவர் சிகை அலங்கார கடை
ராசி சலூன்
Rasi Salon
36, Loampit Hill, Lewisham
London SE 13 7SW
Tel / Fax : 0208 692 5552


HOUNSLOW-வில்
Best Food
அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய்,
அவல், ஊறுகாய், வடகம்,
மரக்கறி வகைகள், பழவகைகள்,
கடல் உணவு வகைகள்,
இன்னும் பல உடனுக்குடன்
இறக்குமதி செய்கிறோம்
364-366, Bath Road Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323

# STARR ESTATES LIMITED

**ESTATE AGENS - VALUERS - SURVEYORS**
**PROPERTY CONSULTANTS**

- Sales
- Lettings
- Property Management
- Surveyors
- Valuations
- Mortgages
- Re-Mortgages
- Commercial Loans
- Buildings & Contents Insurance
- Life Insurance

Advice and assistance on purchase of investment abroad including Europe, Middle East ( Dubai ) and Far East

**Please call us with your requirements**
**ADVICE ON FINANCIAL SERVICES PROVIDED BY QUALIFIED ADVISORS**

CENTRAL PARADE
Station Road Harrow Middlesex HA1 2TW
Tel : 020 8427 5328 Mob : 07956 543 044
Fax : 020 8863 5705
Email : info@starrestatesltd.co.uk
Web : www.starrestatesltd.co.uk



ஜுலை 1ம் திகதி தமிழர் தகவல் ஆதரவில் இலவசமாக லூசியம் சிவன் மண்டபத்தில் மீனாட்சி சித்தரஞ்சனின் நாட்டிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

# இந்திரா செபஸ்தியன் சட்டத்தரணிகள்

1 Central Parade, Station Road, Harrow,
Middlesex HA1 2TW

## IMMIGRATION

குடிவரவு தஞ்சம் கோருவோர் விண்ணப்பம் (asylum)

கல்வி / தொழில் / உயரிர்தொழில்நுட்பம்
(work permits / HSMP / SEGS / SBS)

வியாபாரப்புலம்பெயர்தல் (Business / innovator / investor)

பிரித்தானிய பிரஜாவுரிமை

பிரித்தானிய – இலங்கை இரட்டை பிரஜாவுரிமை!
(Dual citizenship)

திருமண அனுமதி விண்ணப்பம்

ஐரோப்பியர்களின் இருப்பிட விண்ணப்பம், மற்றும்

பிரித்தானியாவில் உறவின அகதிகள் Sponsor

## PROPERTY

கடை / வீடு வாங்கல், விற்றல்

வீடு–கடை உரிமையாளர்– குடியிருப்பாளர் பிணக்குகள்

வியாபாரஸ்தாபன குத்தகை On & Off licence

வியாபார பிணக்குகள் – ஒப்பந்தங்கள்
Business disputes & All types of Agreements

கம்பனி உருவாக்கம் – பிணக்குகள் –
பாங்ரப்ட் (Bankruptcy)

சிவில் வழக்குகள்

குடும்பம் (Family) – தொழில் பிணக்குகள் (Employment)

உயில் எழுதுதல்

Charity & Trust Related Work

Intellectual Property / Information Technology

வியாபார இலச்சினை (Logo / Trade Mark)


எழுத்தாக்கம் – இசையாக்கம் (Copy rights)

வெப்சைட் – கொம்ப்யுட்டர்

விஞ்ஞான கண்டுபிடிப்புகள் (Patents)

..................பதிவுசெய்தல்

Tel : 0208 427 3303 Fax : 0208 427 3313



சுனாமி நடந்த காரணத்தாலே புங்குடு தீவில் தாவரம் விளையாத கடற்கரையில் சுனாமிக்குப் பிறகு செழித்து வளரும் இந்தோனேஷிய தாவரங்கள்.

தீவுப் பகுதி அபிவிருத்தி சபையின் இயக்குனர் பாலா அவர்கள். இவருடைய உதவியினால் புங்குடு தீவு சரவணையில் பல ஆரம்ப பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெறுவதுடன், சமூக நலனைப் பேணும் பல தொழிற்சாலைகளையும் அமைத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


# RATNA & COMPANY SOLICITORS
## (London)

• Immigration and Nationality Law • Work Permit Applications • Highly skilled migrant programme • Tourist visa application and extensions • Student visa applications and extensions • Permenant resident applications if you have lived in the UK for 7/10/14 years • Asylum applications and appeals • Human Rights applications • Bail and detention matters • European citizens applications • Sponsership Declarations • Family Reunion applications • Houses Flats and Business buying selling and re-mortgaging • Traffic offences • Cases before Magistrates Court and County Court • Drafting Will • Drafting Power of Attorney • We are authorised by the Legal services Commission to provide free legal advice.

**We are also able to assess your knowledge in English Language for Nationality applications**

**Contact :**

Mr. M. or Mrs. K. Ratnapalan 169, High Street North, East ham, London E6 1JB

**Tel: 020 - 8470 8818, Fax: 020 - 8475 0131**

**Mobile: 07906 862 292 [Mr.Ratna], 07769 748409 [Mrs. Ratna]**

email: k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com web: www.ratna.co.uk



10.07.2005 நடைபெற்ற Green Light புத்தக வெளியீட்டில் எடுக்கப்பட்ட படம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் அறிவிப்பாளர்கள் விமல் சொக்கநாதன், யோகா தில்லைநாதன், J. இருதயானந்தன், டேவிட் ராஜேந்திரம், ராஜேஸ்வரி சண்முகம் மற்றும் M.T. செல்வராசா ஆகியோருடன் முன்னாள் அரசாங்க அதிபரும், இ.ஒ.கூட்டுத்தாபன மா அதிகாரி நெவில் ஜெயவீர, இ.ஒ. கூட்டுத்தாபனம் ரூபவாகினி ஆகியவற்றின் முன்னாள் தமிழ்ப்பகுதிப் பணிப்பாளரும் Green Light புத்தக ஆசிரியருமான திருமதி ஞானம் ரத்தினம், முன்னாள் இலங்கை திட்டமிடல் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் ஆறுமுகன் தில்லைநாதன் காணப்படுகின்றனர்.




June 25ம் திகதி Logan மண்டபத்தில் 13வது ஆண்டாக ஸ்ரீமதி யோகா தில்லைநாதன் மேடையேற்றிய கானக்குயில் 2005 நிகழ்ச்சியில் அறிவிப்பாளர் S.K. ராஜன் பேசுவதையும், வெற்றி பெற்ற கானக்குயில்களையும் படத்தில் காணலாம். இந்து பத்மபாஸ்கரன், Judeதர்சன் (கானக்குயில்கள் 2005) 2ம் இடத்தைப் பெற்ற வித்யாவிஸ்வேரா, அனகராஜ்

3ம் இடத்தைப் பெற்ற 65 வயதான திருமதி R.அருந்தவம் பரமதாஸ் ஆகியோருடன் விழா அமைப்பாளர்கள் திருமதி யோகா தில்லைநாதன் திரு. தில்லைநாதன்

# வான்புகழ் கொண்ட வள்ளுவம்

## கலைஞர்

" காலை எழுந்தவுடன் களைப்பும் எழுகிறது ;
மாலை வரையிலும் மயக்கம் தொடர்கிறது.

மன்னாரு மருத்துவரே: இந்நோயினைத் தீர்க்க
மருந்தேதும் அளித்திடுவீர் " என மருதன்
வந்தான்.

"மருதா; வா ! மருந்து கிடக்கட்டும் அருந்தலாம்
பிறகு !
மணக்க மணக்க மீன் குழம்பு இருக்கிறது ;

உட்காரப்பா சாப்பிடலா"மென்று ;
உபசாரம் பலமாக
மருத்துவர் மனைவி செய்தவுடன்,
உட்கார்ந்தான் மருதன்.

மலைபோலச் சோறும் அதன்மீது மழை போலக்
குழம்பும் கண்டு ;
மருதன் ஒருபிடிபிடித்து மகிழ்ந்தான்
முழுவதும் உண்டு !

' வயிறு நிரம்பவில்லை ; வாழைப்பழமொன்று
வாங்கி வா ' என்றான் –
வந்தது வாழைப்பழம் ; அதுவும் வயிறு
நோக்கிப் போனது.

வீதியிலே வடை விற்றுக் கொண்டு
போன கிழவி
மீதியுள்ள வடைகளுடன் மருத்துவர்
வீட்டுக்குள் நுழைந்தாள்.

" நாதியில்லையா நாலு வடை வாங்குதற்கு
நான் வாங்குகிறேன் கொடு ! " என்று

நாலையும் எடுத்து நன்கு சுவைத்துத் தின்று,
பாலையும் ஒரு கிண்ணம் பருகி வைத்தான்,
மருதன்.

அடுத்தொரு கணமே அலறிப் புடைத்து, அவன் ;
அணையுடைந்த வெள்ளம் போல் அந்தக்
கூடத்தில்

வாந்தியெடுத்து வாந்தியெடுத்து வாய் பிளந்தான்
" வானமே சுற்றுகிறது, வையகமே பிளக்கிறது ;

வைத்தியரே மருந்து கொடுத்துக் காப்பாற்றும்
என்னை" யென
வயிறு பிசைந்து கொண்டு கதறியழுத
மருதனை,

ஆற்றுப்படுத்தி அமைதியாக மன்னாரு
சொன்னார் ;
" மருந்தென்று ஒன்று வேண்டாம் மருதா ;

அருந்தியது செரித்ததா என்று அறிந்த பிறகு
அடுத்ததை உண்டால் ; மருந்தென ஒன்று
வேண்டாம்.

அய்யன் வள்ளுவர், உடல் நலம் பேண
அளித்திட்ட நல்லுரை – அரு மருந்தன்ன
அறிவுரை ! "

வாழ்வதற்காக உணவருந்து ; உணவு
அருந்துவதற்காக வாழாதே !

வள்ளுவர் குறளின்
தெள்ளிய பொருள் இதுவே !

" மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது
அற்றது போற்றி உணின் "

யாக்கை = உடல்

(உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து உணவு அருந்தினால் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை )

அதிகாரம் 95 மருந்து குறள் 942

# வருமுன் வினை உரைத்த வ. நவரத்தினம்

சிலருக்குச் சிந்தனைத் திறன் இருக்கும். ஆனால் தெளிவு படுத்தும் ஆற்றல் இருக்காது. ஆற்றல் பெற்றவர்களுக்கோ அதனால் ஏற்பட்ட வித்துவக் கர்வம் அறிவுக்கூர்மையை மறைத்துவிடுகிறது. சிலருக்கு செல்வாக்கு இருக்கும். ஆனால் அவர் சொல்வாக்கில் தூய்மை இருக்காது. தமிழர் அரசியலில் இப்படிப்பட்ட அநேகர் உண்டு. தமிழர்களால் புரிந்துக்கொள்ளப்படாத கொள்கையாளர்கள் ஒதுக்கப்பட்டதுமுண்டு. அதன் பலாபலன் பிற்பாடுதான் உணரப்பட்டது. இன்றும்கூட எதிரியிடம் மண்டியிட்டுக் கிடக்கும் பேதிலிகள் பலர் தங்கள் இயக்கப் பெயர்களில் ' தமிழீழ ' என்ற சொல்லைத் தக்கவைத்துக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. இவர்களின் போராட்டம் இன்று தமிழீழத்துக்கு எதிராகத்தானே நடக்கிறது. உலகெங்கும் காணாத வேடிக்கை இது. விளைவுக்குப் பின் விளக்கம் சொல்வதைத் தவிர்த்து, வினையை வருமுன்பே மக்களுக்கு உரைத்த தலைவர்களும் இருந்தார்கள். அவர்களை மக்கள் புறக்கணித்தாலும் அவர்கள் மக்களைப் புறக்கணித்ததில்லை. ' என் கடன் பணி செய்து கிடப்பதே ' என்ற போக்கில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட ஒருவரைப்பற்றியதே இப்பத்தி.

1949ல் ஒரு ஒளிக்கீற்றாக ஈழத்தமிழரிடையே உதயமானது தமிழரசுக்கட்சி. ஒத்துழையாமை இயக்க எண்ணம் உருப்பெற்றது. அதன்பின்தான் அதன் செயலூக்கத்தில் திறன்மிக்க இருவர் இருந்திருந்தார்கள். ஒருவர் வன்னிய சிங்கம் என்ற ஓயாத உழைப்பாளி. மற்றயவர் கட்சியின் ' மூளை ' என்று வர்ணிக்கப்பட்ட தீவகத்து வ. நவரத்தினம். இவர்கள் செயற்றிறனை ' தந்தை ' செல்வாவே பாராட்டியதுண்டு. தொலை நோக்கான சிந்தனை, தெளிவான கோட்பாடு, செயற்படுத்தும் ஆற்றல், துவளாத துணிவு, சலுகைகளுக்கு விலை போகாத நெஞ்சழுத்தம் இவைகளின் மொத்த உருவம்தான் ' நவம் ' என்னும் நவரத்தினம்.


தமிழரசுக் கட்சியின் யாப்பு உருவாக்கம், சோதனையான அதன் ஆரம்பக்கால பொதுச் செயலர் பதவி, கட்சியின் நடைமுறைத் திட்டங்கள். வரலாற்றுப் புகழ்மிக்க திருமலை யாத்திரை, கச்சேரி மறியல் போராட்டம், அதன் தொடர்பான தமிழரசு முத்திரை வெளியீடு. பண்டா– செல்வா ஒப்பந்தம், தமிழ் மொழிவழித் தொழிற் சங்கங்களின் உருவாக்கம் இப்படிப் பல வரலாறு படைத்த பணிகளின் மூளையும் முதல்வரும் அவர்தான் என்பது இன்றும் பலருக்குத் தெரியாது. ஏனெனில் அவர் என்றும் விளம்பரத்தை விரும்பிக் கொண்டவரல்ல. அவரது தியாகங்கட்கு உரிமை கோரியவர்களைக் கண்டுங்கூட அதைக் காணாதவர்போலவே அவர் கருமமாற்றியிருக்கிறார். ஏனெனில் அவர் காரியத்தைத்தான் பார்த்தார்–வீரியத்தை விளம்பரம் செய்ததில்லை. இன்பம் வரும்போது இறும்பூதெய்துவதும் துன்பம் வந்துற்றக்கால் துவண்டுபோவதும் அவரிடமென்றுமிருந்ததில்லை. இந்த வகையில் அவர் ஒரு இராஜாஜி. இந்த ' மூளை ' என்றுமே மேடைகளிலே முழங்கியதில்லை (முழங்கியவர்கள் எல்லாம் வெறும் முண்டங்கள்தான் என்பது அவரது வெளியேற்றத்தின்பின் நிரூபணமானது வேறு கதை) எந்தப் பிரச்சனையிலும் தன் சொந்தப் பிரச்சனையைத் கலக்காத நவம், கட்சியின் நலனுக்காக, மக்களின் எதிர்கால நன்மைக்காக தந்தை செல்வாவுடனேயே மாறுபட்டு நின்றதுமுண்டு – வாய்த் தர்க்கம் புரிந்ததுமுண்டு. அதற்கோர் உதாரணம்; அடையாள அட்டை மசோதா. அன்று அவர் களத்தில் தன்னந்தனியாக நின்று போராடினார். சகாக்களால் காட்டிக் கொடுக்கவும்பட்டார். '' நாய்ப்பட்டிச் சட்டம் '' என்று அதற்கு நாமம் சூட்டி வாதிட்டார். அதைப்பார்த்த, அன்றைய கம்பவறா நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பீ. பண்டாரநாயக்கா என்பவர் '' இவர் ஒருவர் மாத்திரமே தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார் '' என்று பாராட்டினார். எனினும் அவரது சகாக்கள் அன்று நன்மை தீமை தெளியாத நபுஞ்சகங்களாகவே நடந்துகொண்டனர். கட்சிக்கட்டுப்பாட்டை மீறுகிறார் என்று கண்ணீர் வடித்தனர்.

செல்வநாயகம் – சேனநாயக்கா தேசீய அரசு ஏற்படுவதை எதிர்த்தவரும் நவம் ஒருவரேதான். '' அரசியலில் நரிச்சாணக்கியத்தில் ஒரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா நூறு செல்வநாயகங்களுக்குச் சமம் '' என்றார் நவம் (அங்கிருந்து உதைபட்டு ஓடிவந்தபோதுகூட தங்கள் தவறை ஒப்புக்கொள்ளாத தற்குறிகளாகத்தான் தமிழரசுத் தலைவர்கள் இருந்தனர். இதுதான் பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டுக் கட்டி இருந்த கோவணத்தையும் இழந்த பரிதாப நிலை) சிங்களம் படிக்காமை காரணமாக அரசப்பணியிலிருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் அரச ஊழியர்களுக்காக அவர் ஒருவரே நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வாதிட்டார். அதிலும் தமிழரசுத் தலைவர்கள் காலைவாரி விட்டிருந்தனர். அப்புறம் '' எங்கள் அரசுக்காக கோடீசுவரன் மொழிவழக்கை வாபஸ் பெற்று விடுங்கள். '' என்று தந்தை செல்வா உட்பட அனைவரும் கேட்டு நின்றபோது '' அது அடிப்படை உரிமை கோரும் அகில உலகச் சிறுபான்மையினரின் உரிமைக்கே உலைவைத்துவிடும். அல்லாமலும் நீதிமன்ற தீர்ப்பு நடைமுறையில் ' வாபஸ் ' என்ற சொல் கிடையாது – இடம் பெறாது, ' டிஸ்மிஸ் ' என்ற சொல்லே பயன்படுத்தப்படும். எனவே கோடீசுவரன் மொழிவழக்கை உங்கள் சுயநலத்துக்காக காவு கொடுக்காதீர்கள். அது ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமையின் எதிர்காலத்தை இழப்புக்குள்ளாக்கிவிடும். '' என்ற தனித்துவமான தன் சட்ட வாதத்தை முன்வைத்து; மறைக்கப்பட்ட ' கயமையை ' தயக்கமின்றித் தாக்கினார் அவர். அதனால் ஒரு தலைமுறையின் ஆபத்து தவிர்க்கப் பட்டது. அதன் பிரதிபலிப்பாக அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது. வேரை வெட்டி விட்டு விழுதுகள் கட்சியைத் தாங்கிக் கொண்ட விபரீதமும் நடந்தது. மக்களால், தான் ஒதுக்கப்பட்போதும் அந்த மக்களுக்காகச் சிந்தித்து வரும் நவம் அதுபற்றி அலட்டிக்கொள்ளவே இல்லை.


சுயாட்சி, தமிழீழம் என்ற சொற்கள் ஈழத்தமிழர் அரசியலில் அறிமுகமானதற்கு அவர்தான் காரணம். ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்று சொன்னவரும் அவர்தான். அந்த வகையில் '' வேங்கைகள் தோன்றிட வித்திட்டு வைத்தவன் '' என்பதில் தவறில்லையல்லவா. இன்று தனது 95வது அகவையிலும் அந்தத் தீவிரம் அவரிடம் தெளிவாக இருப்பதைக் காண முடிகிறது. தன் அரசியல் பிரவேசத்தால் தன் சொந்த வாழ்வில் ஏற்பட்ட சொத்து இழப்புகளையும், சுக இழப்புகளையும், பழிவாங்கல்களையும் பற்றி அவர் என்றுமே வருந்தியதாகத் தெரியவில்லை. அதுதான் அவர் வாழ்வின் வினைத்தூய்மை. வாக்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்காத ஒரு வித்தியாசமான அரசியல்வாதி அவர். அவை பற்றிய விளக்கங்களைத் தர இங்கே இடம்போதாது என்பதால் விட்டுவிடுகிறேன். '' தாம் வெளிவர முடியாத பெரும் துன்பத்திலே அகப்பட நேரினும் அதிலிருந்து தப்புவதற்காக தமக்கு இழிவு தரும் செயல்களை அசைவற்ற உறுதியான கொள்கையுடையவன் செய்வதே இல்லை '' என்கிறார் வள்ளுவர். அப்படியானால் இதோ. இந்தக் குறளில் ' நவம் ' தெரிகிறார்.

'' இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர் '' (குறள் : 654 )

– கோத்திரன்



தரமான
தங்க நகைகள், பட்டுப்புடவைகள் ஆடவர், சிறுவர்ளுக்கான ஆடைகள்
என்றதும் உங்கள் நினைவில் வருவது
JK Gold House
&
Fashion House
314-316 London Road Croydon Surrey CRO 2TJ Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677
தங்க நகைகள் 1 கிராம்
£ 7.79 + vat
ஆடைகள்
50%
மலிவு விலையில்
தினசரி தங்கத்தின்
விலையை
ttn
IBC
வானொலி
தொலைக்காட்சியில்
கேளுங்கள்


MITHUS
Jewellers
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792
DIAMONDS
Palace
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814